இலங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது. Registered as a Newspaper at the G


# புதிய கண்ணோட்டம்

PUTHIYA KANNOTTAM

පුදිය කණ්ණොට්ටම්

வெளியீடு: 50 | 05 கார்த்திகை 1999 | விலை: ரூபா 7.00




போர்க்களமாக மாறும் அபாயம் பக்கம் 05



கொலைகாரர்களின் விவாதம் பக்கம் 06



மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பக்கம் 09

# புதிய நூற்றாண்டின் ஆரம்பம்
# இனங்களின் ஐக்கியத்துடனா?
# இரத்தக்களரியுடனா?

அடுத்த ஒரு தவணைக்கு ஆட்சி செய்வதற்கு தனக்கு மக்கள் ஆணை தருமாறு ஜனாதிபதி சந்திரிகா வேண்டுகோள் விடுத்துள்ளார். இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கும் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்குமே பிரதானமாக தனக்கு ஆதரவளிக்குமாறு கூறியுள்ளார்.

5ஆண்டுகளுக்கு முன்னர் பதவிக்கு வரும்போது சகல அதிகாரமும் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாமல் செய்வது இனைப்பிரச்சினைக்கு சமாதானபூர்வமான தீர்வு, ஜனநாயகம், மனித உரிமைகளை உறுதி செய்தல் என வாக்குறுதியளிக்கப்பட்டது.

இந்த மிக முக்கியமான விடயங்கள் தொடர்பாக ஆரம்பத்தில் முன் முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால் இந்த முயற்சிகள் கைகூடாமல் போனதற்கு புலிகளும், ஐ.தே.கவினரும் காரண கர்த்தாக்களாக இருந்தார்கள் என்பதை நேர்மையாக சிந்திக்கும் எவரும் ஒத்துக்கொள்வர்.

தமிழ்க்கட்சிகள், முஸ்லிம், காங்கிரஸ், மலையகட்சிகள் இந்த முயற்சிகளுக்கு தம்மாலான ஒத்துழைப்பை தொடர்ந்து வழங்கின.

ஆனால் புலிகள் பேச்சுவார்த்தையை நீடிக்கவில்லை. சீர்குலைத்தார்கள். ஐ.தே.கவினரோ இந்த நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கான முன் முயற்சிகளுக்குப் பங்களிக்காமல் எதிர்த்திசையில் நின்றே செயல்ப்பட்டார்கள். தற்போதும் அவ்வாறுதான் செயற்படுகிறார்கள்.





தற்போது யுத்தநிறுத்தம், புலிகளுடன் பேச்சுவார்த்தை, திருமலைத்துறை முகத்தை மாகாணத்திற்கு வழங்குதல் என்றெல்லாம் பேசுகிறார்கள். இவற்றில் எவ்வளவு தூரம் உண்மை, விசுவாசம் இவர்களுக்கு இருக்கிறது என்பது சந்தேகமானதே.

மாகாணசபைக்கு 13வ்து திருத்த சட்டமூலத்தின் கிழான அதிகாரங்களையே வழங்காதவர்கள். வடகிழக்கு மாகாணசபையை சட்டத்திற்கு புறம்பாகக் கலைத்தார்கள். இன்றுவரை அதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லை.

ஆனால் தமிழ் முஸ்லிம் மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கல் மூலம் கிடைத்த முதல் வாய்ப்பைச் சீர்குலைத்தவர்கள் திருமலைத்துறை முகத்தை மாகாணத்திற்கு வழங்குவதாக கூறுவது மக்களை மடையர்களாக நினைக்கும் நிலைப்பாடாகும்.



தமிழ் மக்களின் வாழ்க்கையில் நேர்ந்த மிகமோசமான கொடூரங்கள் நடந்த மிக நீண்டகால ஆட்சி ஐ.தே.க வினுடையது. குறுகியகாலத்தினுள் மூன்று இனவன்முறைகள் ஏவிவிடப்பட்டதும், சிறைப்படுகொலை நடந்ததும், பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டதும் அந்த இருண்ட காலத்தில் தான்.

அதே காலத்தில் பல ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களும், யுவதிகளும் படுகொலை செய்யப்பட்டார்கள்.

மக்களின் ஞாபக மறதியில் அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்துள்ள அவர்கள் சிறுபான்மை இனமக்களின் ஆதரவுடன் ஆட்சியில் ஏறலாம் என நினைக்கிறார்கள்.

20ம் நூற்றாண்டில் இறுதிப் பகுதியில் வாழ்பவர்கள் பல்வேறு தகவல் தொடர்பு சாதனங்

தொடர்ச்சி 11ம் பக்கம் ☞



## கண்ணீர் அஞ்சலி

அந்த மனிதருக்கு அரசியல் வாழ்க்கை மாத்திரம் அறுபது ஆண்டுகள் மலையகம் என்றால் 'தொண்டா' என்ற பெயரும் கலந்துதான் எம் மனத்திரையில் நிழலாடும்.

இந்த நாட்டில் வாக்குரிமை, பிரஜா உரிமை மிக நீண்ட காலத்திற்கு மறுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதி!

இந்த நாட்டின் தேசிய வருமானத்தில் அறுபது வீதத்தை இன்றுவரை ஈட்டித்தரும் தோட்டத்தொழிலாளர்களின் தலைவன்!

ஆசியாவில் இலங்கை தொழிலாளர்காங்கிரஸ் ஒரு முக்கியமான தொழிற்சங்கம்!

அவர் சர்வதேச தொழிலாளர் ஒன்றியத்தின் தலைமைப்பீட உறுப்பினர்களில் ஒருவர்.

பேரினவாதிகளால் மிகமோசமாக வெறுக்கப்பட்ட, அவதூறு செய்யப்பட்ட அரசியல்வாதி அவர்.

மலையக மக்கள் பட்ட துன்பங்களின் அனுபவங்களை அவரும் அனுபவித்தார்.

தனக்கு சரியென பட்டதை எப்போதும் வெளிப்படையாக கூறுவதும், செயற்படுவதும் அவரின் ஆளுமையின் வெளிப்பாடுகள்.

வடகிழக்கில் தமிழ் மக்கள் படும் வேதனைகளையிட்டும், துன்பங்களையிட்டும் அவர் கவலையடைந்திருந்தார் ஒரு நியாயபூர்வமான தீர்வு ஏற்படவேண்டும் சமாதானம் உருவாகவேண்டும். என்பது அவரது பேரவா.

அன்னாரின் மறைவுக்கு புதிய கண்ணோட்டம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றது.

# கண்ணோட்டம்

## 1977,1980,1983 ஐ மறந்துவிட முடியுமா

தமிழ்க்கட்சிகள் ஐ.தே.கவின் காலத்தை விட ஒப்பிட்டளவில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் காலத்தில் செயற்பட முடிந்தது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

ஆட்கள் காணாமல் போதல், ரயர்மாலை, வெள்ளைவான் என்பன அன்றைய ஆட்சியின் திகிலூட்டும் நடவடிக்கைகளாகக் காணப்பட்டன. 1977, 1980, 1983 ஐ அவ்வளவு இலகுவில் தமிழர்கள் மறந்துவிட முடியாது.

தமிழ்ப்பகுதியில் மாத்திரமல்ல; நாடு பூராவுமே மயானங்கள் உருவாக்கப்பட்டிந்தன. இன்னும் கூட யுத்த சூழ்நிலையில் மரண ஓலங்கள் தெற்கிலும், வடகிழக்கிலும் கேட்டுக்கொண்டிருந்தாலும்- மறுதலையாக சமாதானம், மனித உரிமைகள் மீதான அக்கறையும், தமிழ் மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கப்படவேண்டும்-என்ற கருத்தும் அரச, சமூக மட்டத்தில் நிலவுகின்றன.

ஐ.தே.காவின் ஆட்சிக்காலத்தில் இந்த மறுதலையான இடைவெளி இருக்கவில்லை. கொலைகாரர்கள் பல ஆடம்பர வசதிகளுடன் சுதந்திரமாக வாழ்ந்தார்கள்.

அரசியல் கட்சிகள், பத்திரிகையாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் சுதந்திரமான செயற்பாடு நினைத்துப்பார்க்க முடியாதிருந்தது. தற்போது மனித உரிமை மீறல்கள், ஜனநாயக அடிப்படை உரிமை மீறல்கள் விசாரணைக்குட்படுத்தக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு. அப்போது இத்தகைய கட்டமைப்புகள் முடக்கப்பட்டிருந்தன.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் இதற்கான கட்டமைப்புகள் உருவாக்கும் முயற்சிகள் நடைபெற்றன என்பதை நாம் கருத்திற்கெடுக்கவேண்டும்.

## இந்தியாவின் ஒற்றுமையும் பன்முகத்தன்மையும்

இந்தியாவின் தேர்தல் முடிவுகள் மௌனமாக ஒரு முக்கிய செய்தியை எடுத்தியம்புகின்றன. அதாவது கூட்டு, பல்முகத்தன்மை என்பதே அது. ஒருமைப்பட்ட இந்தியாவும் பல வண்ணங்களும் என்பதே பெரும்பாலான இந்தியர்களின் அடிமன ஆழத்திலுள்ளது.

இந்திய மக்களின் இந்த சிந்தனைப்போக்கு எதிர்காலத்தில் மாபெரும் மாற்றங்களுக்கு வழிகோலலாம். ஒருவரையொருவர் மதித்து ஒன்றிணைந்து வாழ்தல் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

பிரதமர் வாஜ்பாயின் தலைமையில் 24கட்சிகளின் கூட்டாக அரசு அமைய வாய்ப்பளித்த மக்கள்; இந்தியாவின் மகள், மருமகள் என்ற நிலப்பிரபுத்துவகாலக் கதைகளையும் செவிமடுக்கவில்லை. பெல்லாரியிலும், அமேதியிலும் சோனியா காந்திக்குக் கிடைத்த வெற்றிகள் அதனைத்தான் புலப்படுத்துகின்றன.

பாட்டாளி மக்கள் கட்சி, மறுமலர்ச்சி தி.மு.கவின் வெற்றி புலிகளுக்கு சாதகமான தலையீட்டை இந்தியா மேற்கொள்ள வழிவகுக்குமென்று இலங்கை பத்திரிகைகள் வழமைபோல் ஆருடம் கூறியுள்ளன.

இந்தியாவின் பொது நலன்கள், மாநிலங்களின் பிரத்தியேக நலன்கள் என்பனவே இங்கு இந்திய மக்களின் மனங்களில் முதன்மைபெறும் விடயங்கள். நகருமென கருதுவது அறிவீனம்.

அந்தக் கட்சிகள் கூட அதனைப் புரிந்துதான் வைத்திருக்கின்றன. தமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் எழுதியிருப்பவை எவ்வளவு தூரம் நடைமுறைக்கு உபயோகமானவை என்பதை அவர்கள் நன்கு அறிந்து வைத்திருக்கிறார்கள் என்றே கருதவேண்டும். சில சந்தர்ப்பங்களில், சில இடங்களில் பிரச்சார நோக்கங்களுக்காக புலி ஆதரவு பயன்படுத்தப்படலாம். அவ்வளவே. அதற்குமேல் நகரவே நகராது.

## துப்பாக்கி முனையில்

★ 01-10-99 அன்று இரவு மட்டக்களப்பு பொதுஜன ஐக்கிய முன்னணி அமைப்பாளர் வீட்டின் மீது விடுதலைப் புலிகள் தாக்கியபோது பொலீசார் திருப்பித்தாக்கியதில் ஒரு புலி கொல்லப்பட்டார். இவரின் சடலம் சனிக்கிழமை மாலை (2.10.99) கரடியனாறு பகுதியில் வைத்து சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினால் விடுதலைப்புலிகளிடம் ஒப் படைக்கப்பட்டது.

★ 02-10-99 அன்று வவுனியா செட்டிகுளம் காட்டுப் பகுதியல் இரண்டு எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள் ளன. இதன் அருகே கத்தி கோடரி சில உடுப்புகளும் இந்தன. கடந்த பெப்பிரவரி மாதம் 15ம் திகதி காட்டுக்கு வேட்டையாடச் சென்ற கக்காரங்குளம் வாசிகள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். எஸ். சுதாகரன் (22 வயது) சீ. கோபி குமாரநாத் (வயது 34) ஆகியோர் அன்றய தினம் வேட்டைக்கு சென்று காணாமற் போனவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

★ 03-10-99 அன்று கனகராயன் குளம் முன்னணிக் காவல் அரண்மீது புலிகள் தாக்கியதில் ஒரு படை வீரர் கொல்லப்பட்டுள்ளார். இராணுவத்தினர் திருப்பித் தாக்கி யதில் இரு புலிகள் பலியானதாக படை வட்டாரங்கள் தெரிவித்தன.

★ 04-10-99 அன்று விடுவிக்கப்படாத வன்னிப்பிர தேசத்தில் இருந்து இரண்டரை வயதுக் குழந்தை துரைராஜா தனுஷா வவுனியா ஆஸ்பத்திரியில் மேலதிக சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டிருக்கிறார். இக்குழந்தைக்கு முல் லைத்தீவு-புதுக்குடியிருப்பு விமானக் குண்டு வீச்சுக் சம்ப வத்தில் இடுப்பில் குண்டுபட்டு அடிவயிற்றில் காயம் ஏற் பட்டுள்ளது. இக் கோரச்சம்பவத்தில் குழந்தையின் தாயார் ஜெனோபாவும் கொல்லப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

★ 05-10-99 அன்று செவ்வாய் கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் திருகோணமலை-அநுராதபுரம் வீதி யில் இராணுவத்திற்கு சொந்தமான தண்ணீர் பவுஸர் ஒன்றின் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியிருக் கிறார்கள். இத்தாக்குதலில் அந்த பவுஸரில் இருந்து இரு இராணு வீரர்கள் கொல்லப்பட்டனர். பவுஸர் முற்றாக எரிந்து சாம்பலானது. ஆர்.பி.ஜி மூலம் இத்தாக்குதல் நடந்ததாக படையினர் தெரிவித்தனர்.

★ 06-10-99 அன்று காரைநகர் கடற்கரைப்பகுதியில் உயரமாக அமைக்கப்பட்ட காவல் அரண் சரிந்து விழுந் ததினால் காவல் கடமையில் இருந்த கடற்படை வீரர் ஒருவர் மரணமடைந்தார். அடைமழை காரணமாக காவல் அரண் சரிந்து விழுந்ததாக தெரியவருகின்றது.

★ 07-10-99 அன்று அதிகாலை 1.30 மணியளவில் மன்னார் கடற்பகுதியல் கடற்படையினருக்கும்-கடற்புலி களுக்கும் இடையே கடும் மோதல் இடம் பெற்றதாக தெரியவருகின்றது. இக்கடற்சமரில் கடற்புலிகள் 15பேர் பலியானதாக புலிகள் வன்னியில் அறிவித்துள்ளனர். கடற்படையினருக்கு இழப்பு எதுவுமில்லை என அறியப் படுகின்றது. துப்பாக்கி சூட்டுக்காயங்களுடன் 7சடலங்கள் மண்டைதீவு நெடுந்தீவு காரையோரங்களில் இதுவரை ஒழுங்கியிருக்கின்றன.

★ 08-10-99 அன்று யாழ்-திருநெல்வேலியிலுள்ள ஈ.பி.டி.பி அலுவலகத்தில் கிரனேட் குண்டுகள் இரண்டு தவறுதலாக வெடித்ததால் கந்தையா நகுலேஸ்வரன் (20வயது) என்பவர் மரணமானார். இரவு படுக்கைக்கு போகமுன் தனக்கு அருகே இரு கிரனேட் குண்டுகளை தலைமாட்டில் வைத்துவிட்டு படுக்கைக்கு போனதன் பின் இச்சம்பவம் நிகழ்ந்தது.

★ 09-10-99 அன்று மாலை வவுனியா பஸ் நிலையத் தில் கிரனேற் ஒன்று வெடித்ததினால் 10 பொதுமக்கள் காயமடைந்தனர். சில கடைகளும் சேதமடைந்துள்ளன. இனந்தெரியாத இளைஞர் ஒருவர் கிரனேற் ஒன்றை திடீரென வீசிவிட்டு ஓடியதாக சம்பவத்தை நேரில் கண்ட வர்கள் தெரிவித்தனர்.

★ 10-10-99 அன்று சைனட் உட்கொண்டு மரண மடைந்த இளைஞர் ஒருவரின் சடலம் சுன்னாகம் பொலீ சாரால் யாழ். வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள் ளது. யாழ்ப்பாணம் கட்டுவன் புலத்தில் 9-10-99 சனிக் கிழமை மாலை பொலிசாரின் துப்பாக்கி பிரயோகத்தின் போது இச்சம்பவம் நிகழ்ந்தது. இந்த துப்பாக்கி சூட்டில் காயமடைந்த யுவதி வேலாயுதம்பிள்ளை ஜசிந்தா யாழ்- வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள் ளார். காயமடைந்த பெண் புலி இயக்கத்தை சேர்ந்தவராக இருக்கலாம் என்று சந்தேகத்தில் பொலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருக்கிறது.

★ 11-10-99 அன்று காலை கொழும்பில் இருந்து காத்தான்குடிக்கு வந்த பஸ் பயணிகளை ஆரையம்பதியில் இறக்கிவிட்டு டிப்போவுக்கு வரும் வழியில் பஸ்ஸினுள் கைவிடப்பட்ட பார்சல் ஒன்றை நடத்துனர் அவதானித்துள் ளார். பார்சலில் வயர்கள்-கம்பிகள் தெரிந்ததும் சந்தேகம் கொண்டு அதை எடுத்து நடத்துனர் வெளியே எறிந்தபோது அது வெடித்தச் சிதறியது. இதனால் பஸ்சுக்கு சேதமோ- எவருக்கும் காயமோ ஏற்படவில்லை.

★ 12-10-99 அன்று இரவு 9.30 மணியளவில் மன் னார் தலைமன்னார் வீதி 2ஆம் கட்டைப்பகுதியில் இராணு வத்தினரின் துப்பாக்கி சூட்டில் சின்னையா ரவீந்திரன் (வயது25) என்பவர் கொல்லப்பட்டும்- கே. குமார் (வயது28) படுகாயப்பட்டுமிருக்கிறார்கள். கொல்லப்பட்டவர் இயக்கச்சி- பளையைச் சேர்ந்தவர். இவரது சடலத்தில் இடுப்பிலும் கழுத்திலும் துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்பட்டன. இவர் மன்னாரில் கடையொன்றில் பணிபுரிந்தவர் என்பது தெரியவந்திருக்கிறது.

★ 12-10-99 அன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஈ.பி.டி.பி இன் அக்கரைப்பற்றுப் பொறுப்பாளரும் முன் னாள் பிரதேச சபை உறுப்பினருமான தம்பிராசா வினா யகமூர்த்தி (வாகீசன் வயது 38) புலிகளின் பிஸ்டல் குழு வினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். இவர் அக்கரைப்பற்று 8ம் குறுச்சி அலுவலகத்திற்கு வெளியே வந்த போத இத்துயர சம்பவம் நடந்தது.

★ 13-10-99 அன்று யாழ் மனித உரிமை ஆணைக் குழு அதிகாரி எஸ். சிறீதரன்-காங்கேசன்துறை பயங்கர வாத தடுப்பு முகாமை நேரில் சென்று பார்வையிட்டார். தற்போது-அன்றய தினகணக்கெடுப்பின் பிரகாரம் 2 பெண்களும் 11ஆண்டுகளும் அம் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்களின் பெயர் விபரங்களை எஸ். சிறீதரன் இராணுவ அதிகாரியிடம் இருந்து பெற்றுக் கொண்டார்.

★ 14-10-99 அன்று பிற்பகல் யாழ்-ஆனைப்பந்தி சந்தி நாவலர் வீதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட் டும்-பேக்கரி உரிமையாளர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். நாவலர் வீதி காவல் கடமையில் ஈடுபட்டிருந்த இராணு வத்தினர் மீது புலிகள் கிரனேட் வீசியதை அடுத்தே இத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதிய கண்ணோட்டம் வரவேற்கிறது.

**புதிய கண்ணோட்டம்**
**த.பெ.இல: 442**
**கொழும்பு**

அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

E.P.I.C., Box No: 95,
95144, GargesLes,
Gonnesse Cedex,
France.

B.M.Box: 1738,
London-WCIX-3NN,
U.K.

Post Bag: 1041,
Madras-17,
India.

P.Fach: 506,
Bern-17,
Switzerland.

P.Fach: 66,
59514 Welver,
Germany.

பள்ளிமுனை வீதி,
உப்புக்குளம்.
மன்னார்.
☎ 023-2370

54, மாணிக்கவாசகர் வீதி,
திருகோணமலை.
☎ 026-22858

29A, வாவிக்கரை வீதி-1,
மட்டக்களப்பு.
☎ 065-22398

310, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 021-2022

22, வெளிவட்ட வீதி,
வவுனியா.
☎ 024-22724

**மின் அஞ்சல் முகவரிகள் (E-mail Address):**

epic-sl@slt.lk - Colombo
csorg@slt.lk - Jaffna
epic-vu@sltnet.lk - Vavuniya
epiclondon@gn.apc.org - London
editor@epicnews.com - Canada
epic-g@t-online.de - Germany

**Web site Address :** http://www.epicnews.com

## அன்பிற்கினிய தமிழ் பேசும் மக்களே!

இன்னும் இரண்டு மாதங்களில் இரண்டாயிரமாவது வருடத்தில் காலடி வைக்கப்போகின்றோம். ஆனால் பிறக்கப்போகும் அடுத்த நூற்றாண்டும், தமிழ் மக்களுக்கு நம்பிக்கையற்ற ஆண்டாகவே மலரப் போவது வேதனைமிக்கது.

யுத்தத்தின் மூலமோ அல்லது வேறு எவ்வகையான திருகுதாளம் மூலமோ 2000ம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலிலும், பாராளுமன்றத் தேர்தலிலும் வென்று விட வேண்டுமென்பதே அரசின் நோக்கம். அரசில் இருப்பதென்பது, மில்லியன் கணக்காக டாலர்களை சம்பாதிப்பதற்கான ஓர் இடமாகும்.

எனவே அப்படியான ஓர் இடத்தை இழந்து போகக்கூடாது என்பதில் அரசு மிகுந்த ஆர்வமாக இருக்கும் என்பதுடன், தொடர்ந்தும் அரசுக் கட்டிலை தன்னுடன் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக என்ன விலை கொடுக்கவும் அவர்கள் தயாராக இருப்பார்கள். அதே போல் இழந்து போன அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும் என்பதில் எதிர்க்கட்சியும் உறுதியாக இருக்கிறது.

யுத்தம், இன அழிவு, அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவு, ஊழல், இப்படிப் பல சீர்கேடுகளும் அரசில் மேல் நம்பிக்கையீனத்தையே உருவாக்குகின்றது. அதே போல், எதிர்க்கட்சியிடமும் நம்பிக்கை கொள்ளக்கூடிய வகையில் மாற்றுத்திட்டங்களோ மாற்றுக் கருத்துக்களோ இல்லை.

இந்நிலையில், 2000ம் ஆண்டில் அமையப்போகும் பாராளுமன்றம், இப்போதைய பாராளுமன்றத்தைப் போல் ஒன்றிரண்டு பெரும்பான்மையுடனோ அல்லது தொங்கு பாராளுமன்றமாகவோ அமையலாம்.

இவை இனப்பிரச்சனையைத் தீர்ப்பதில் மேலும் தாமதங்களையே உருவாக்கும். ஆனால் தமிழ்க் கட்சிகள் இவற்றை எவ்வளவு தூரம் புரிந்து கொண்டுள்ளன என்பது கேள்விக்குரியதே.

புலிகளும், அரசாங்கமும் இராணுவத் தீர்விலேயே முனைப்பாக இருக்கின்றார்கள். புலிகளை அழித்து விடுவோம் என்ற அரசின் பிரச்சாரமும், இராணுவத்தை அழித்து விடுவோம் என்ற புலிகளின் பிரச்சாரமும், முழு மக்களையுமே ஏமாளிகளாக நினைத்து நடாத்தப்படும் கோயாபல்ஸ்நாடகமே என்பதில் எல்லாருமே தெளிவாக உள்ளார்கள்.

ஒரு புறம் மக்களைக் கவர்வதற்காக இவ்வாறான அண்டப்புழுகுகளை அவிட்டுவிடும் அதே சமயம் 2000ம் ஆண்டிற்கு முன்னர் மிச்சசொச்சமாக இருக்கக்கூடிய தமிழ் தலைமைகளையும் அழித்து ஏகப் பிரதிநிதிகளாகிவிட வேண்டும் என்பதில் புலிகள் ஆர்வமாகவே இருக்கின்றார்கள்.

ஆனால் தமிழ்க்கட்சிகளோ எது எக்கேடு கெட்டுப் போனாலும் பரவாயில்லை என்ற நோக்கிலேயே அவர்களது செயற்பாடுகள் அமைகின்றன. குறைந்த பட்சம் தமிழ் மக்களின் உரிமைகட்காவது நாம் ஒரே குரலில் பேசவேண்டும் என்று சிந்திக்கக் கூட மறுக்கின்றார்கள். கூட்டுச் சேர்ந்துவிட்டால் தமக்கு கிடைக்க இருக்கும் ஆசனங்களை வேறு யாராவது சுருட்டிக்கொண்டு போய் விடுவார்கள் என்ற பயமே தமிழ்க்கட்சிகள் மத்தியில் பெருமளவில் இருக்கின்றது.

தனித்து போட்டியிட்டால் கடந்த தேர்தலில் வென்றதைப்போல் யாழ் மாவட்டத்தில் மீண்டும் அதிக ஆசனங்களை தாங்களே பெற்றுக் கொள்வோம் என்ற ஒரு சாராரின் போக்கும், தேர்தலில் போட்டியிட எம்மிடம் ஆட்கள் இல்லாவிட்டாலும் மக்கள் எமக்கே வாக்களிப்பார்கள், கூட்டாகப் போட்டியிட்டால் அது கிடைக்காமல் போய் விடும் என்ற கூட்டணியின் போக்கும், இவர்களின் குறுகிய பார்வையையே காட்டுகின்றது.


தமிழ்க்கட்சிகள் ஒன்றுபட வேண்டும், அவை தமிழ் மக்களுக்காக ஒரே குரலில் பேச வேண்டும், இனப்பிரச்சனை தீர அவர்கள் சுதந்திரமான பங்களிப்பும் நல்க வேண்டும், என்னதான் பத்திரிகைகள், தமிழ் மக்கள் காட்டுக் கத்தல் கத்தினாலும் அது தமிழ் கட்சிகளின் காதில் விழுவதில்லை.

இந்தப் பெரிய இந்தியாவிலேயே ஒரு திமுக, அதிமுகவால் 535 பேர் கொண்ட பாராளுமன்றத்தை நிர்ணயிக்க முடியுமெனில் இலங்கைத் தமிழ்க்கட்சிகள் ஒன்றுபட்டு இதனை ஏன் முயற்சித்துப்பார்க்கக் கூடாது.

முதலாவது தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தீர்வு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதை கொள்கையளவில் தமிழ்க்கட்சிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அத்தீர்வை உருவாக்குவதற்கான மூலோபாயங்கள், தந்திரோபாயங்களையும் அவர்கள் வகுத்துக் கொள்ள வேண்டும்.

இதன்மூலம், உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும், ஓர் சமாதானத் தீர்வினை நோக்கிய பணிக்கு இயன்ற வரை ஆதரவைத் திரட்ட வேண்டும். இவ்வேலைத்திட்டத்தில் பாராளுமன்றத்தையும், புத்தி சாதுரியத்துடன் பயன்படுத்திக் கொள்ளலாம்.

கடந்த தேர்தலில் தமிழ்க்கட்சிகள் பிரிந்து நின்று போட்டியிட்டதால், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் நாம் தமிழ் மக்களின் பிரதிநிதிகளை ஏனைய சமூகங்களுக்கு தாரை வார்த்துக் கொடுத்ததுடன் தேசிய பட்டியலில் எமக்கு கிடைக்க இருந்த பிரதிநிதித்துவத்தையும் இழந்தோம்.



இன்றைய விகிதாசார தேர்தல் பிரதிநிதித்துவத்தின் மூலமும், இன விகிதாசாரத்தின் அடிப்படையிலும் வட-கிழக்கில் 24 ஆசனங்களை வென்றிருக்க வேண்டிய தமிழ்க் கட்சிகள் 17 ஆசனங்களையே பெற்றிருந்தன.

வரலாற்றில் முதன் முறையாக வவுனியாவில் ஓர் சிங்களப்பிரதிநிதி உருவாகவும், அம்பாறைப் பிரதிநிதித்துவத்தை இழந்து போகவும் காரணமாக இருந்தோம் என்பதை தமிழ்க்கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே இத்தவறுகளை மீண்டும் விடாது தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை தமிழ்க் கட்சிகளே பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் அவர்கள் ஒன்றுபடுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதையும் அவர்கள் உணர வேண்டும்.

அறுதிப் பெரும்பான்மை அற்ற ஓர் பாராளுமன்றத்தில் 24 பேர் கொண்ட தமிழ் பிரதிநிதிகளின் கூட்டானது ஜனநாயக அரசியலில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்த முடியும்.

யுத்த நிறுத்தம், மூன்றாம் தரப்பு பேச்சுவார்த்தை, போன்ற பல்வேறு விடயங்களுக்கு இத் தமிழ்த் தரப்பால் பாரிய அழுத்தங்களை உருவாக்க முடியும். அதே போன்று உலக நாடுகளின் கவனத்தை எம்மீது திருப்பவும் இவர்கள் பாரிய பங்களிப்புச் செய்ய முடியும்.

எனவே தமிழ் மக்களின் இக்கட்டான நிலமை, தமிழ்க்கட்சிகள் பிரிந்து நின்று செயற்படுவதால் ஏற்படக்கூடிய பலவீனங்கள். தமிழ்க்கட்சிகள் ஒன்றுபடுவதால் ஏற்படுத்தக்கூடிய அழுத்தங்கள், இவற்றைக் கருதில் கொண்டு தமிழ்க் கட்சிகள் தமக்குள் ஒன்றுபடுவதைப் பற்றி ஆலோசிக்க வேண்டும்.

தத்தமது கட்சிகளே பெரியது, ஒவ்வொருவருக்கும் ஏதோ பல இலட்சம் வாக்கு வங்கிகளை வைத்திருக்கின்றோம் என்ற மாயையில், கற்பனையில் மூழ்காமல், தமிழ் மக்களின் விடுதலைக்கு, காத்திரமான ஓர் பங்களிப்பைச் செய்ய வேண்டுமாயின், இவர்கள் ஒற்றுமைப்பட வேண்டியதும், ஐக்கியப்பட வேண்டியதும் மிகவும் முக்கியமாகும். இல்லையேல் ஆளும் தரப்பாலும் முட்டாள்களாக்கப்பட்ட அரசின் கைப்பாவைகளாக இவர்கள் செயற்பட வேண்டியது தவிர்க்க முடியாததாகிவிடும்.

எது தேவை என்பதை சிந்திக்க வேண்டிய அவசியமும், அவசரமும் இப்பொழுது தமிழ்க்கட்சிகளுக்கு வந்துள்ளதாகவே நான் கருதுகின்றேன்.

இப்படிக்கு
தோழமையுடன்
க. சுரேஷ்

# ஒரு சமூக கவிஞன் சாருமதியின் நினைவுகளில்....

1960ற்கு பின் ஈழத்து இலக்கியப் போக்கில் முற்போக்கு இலக்கியம் முக்கிய பாத்திரம் வகிக்க தொடங்கியது. அந்த வளர்ச்சியினூடாக செ. கணேசலிங்கம், டானியல், டொமினிக்ஜீவா, நீர்வை பொன்னையன், என்.கே. ரகுநாதன், யோ. பெனடிற்பாலன் போன்ற சிறுகதை எழுத்தாளர்களும் முருகையன், நுஃமான், சண்முகம் சிவலிங்கம், பசுபதி சுபத்திரன், ஆகிய கவிஞர்களும் கைலாசபதி, சிவத்தம்பி, இந்திரபாலா போன்ற விமர்சகரும் உருவாகினர்.

இதன் தொடர்ச்சியாக 1965ற்குப்பின் இடதுசாரி சிந்தனையுள்ள புதிய எழுத்தாளர் பரம்பரையொன்றே உருவாகியது. அந்த வரிசையில் கவிஞர் சாருமதியும் ஈழத்து இலக்கிய உலகிற்கு அறிமுகமானார். அவரது கவிதைகள் தீவிரமான கருத்துக்களை வெளியிட்டதுடன் மார்க்சிய சித்தாந்தமே உண்மையான விடுதலையை பெற்றுத் தரும் என்ற உறுதியான நம்பிக்கையை கொண்டவராக இறுதிவரை இருந்து வந்துள்ளார்.

சண்முகதாசன் தலைமையிலான சீனச்சார்பு கம்யூனிஸ்ட்கட்சி, கீழைக்காற்று அமைப்பு, என்பவற்றில் ஸ்தாபன ரீதியாக இணைந்து செயல்பட்டதுடன் ஈழத்தமிழர்கள் மத்தியில் 1983இல் ஏற்பட்ட ஆயுதம் தாங்கிய தமிழ் அமைப்புகளின் வளர்ச்சியில் இவர் தமிழ் மக்கள் பாதுகாப்பு பேரவையின் ஆலோசகராகவும் வழிகாட்டியாகவும் செயற்பட்டார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

1990ற்குபின் இவரது அரசியல் நடவடிக்கையில் இருந்து தன்னை விடுவித்து கொண்டாலும் அரசியல் ரீதியில் சரியான எந்த முடிவையும் எடுக்க முடியாதவராகவே காணப்பட்டார். இவரது அரசியலைவிட இலக்கியப்பக்கங்களே கனதியானவை.

இவரது மறைவின் ஓராண்டை நினைவு கூரும் வகையில் மட்டக்களப்பில் செயற்படும் இலக்கிய அமைப்புகளானா புதியசிந்தனை வட்டம், பூவரசுகள், வாசகர்வட்டம், மாக்சிய சிந்தனைவட்டம் ஆகியன இணைந்து கலை இலக்கிய நண்பர்கள் என்ற பொதுப் பெயருடன் சாருமதி நினைவுதினக் கூட்டத்தை நடாத்தின. இக்கூட்டம் 3.10. 1999 இல் காலை 10மணிக்கு மட்டக்களப்பு கத்தோலிக்க மண்டபத்தில் முதன் நிலை சனசமூக உத்தியோகஸ்தர் காசுபதி நடராஜா தலைமையில் நடைபெற்றது.

காசுபதி நடராஜா தமது தலைமையுரையில் கவிஞர் சாருமதி சிறந்த கவிஞராவர். சமூகக் கொடுமைகளை துணிச்சலுடன் எதிர்த்தவர் இதனால் தான் வாழ்ந்த சமூகத்தில் எதிர்ப்பு வந்தாலும் அதனைப் பற்றியெல்லாம் கவலைப் படாமல் தான் வரிந்து கட்டிக்கொண்ட இலட்சியங்களுக்காக தொடர்ந்து எழுதிவந்தவர் அத்தோடு மண்முனை வடக்கு கலாசாரப் பேரவையின் உறுப்பினராக இருந்து பணியாற்றினார். அதை கௌரவிக்கும் வகையில் அவர்பற்றிய குறிப்புக்கள் வெளியிட்டு நினைவு கூர்ந்துள்ளது என்று குறிப்பிட்டார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மத்திய கமிட்டி உறுப்பினர் திரு. நா. நேசராசா அறிமுக உரை நிகழ்த்துகையில் 1965ற்கு பின் சீனச் சார்பு (சண்முகதாசன் தலைமையிலான) கம்யூனிஸ்ட் கட்சியில் ஒரு தோழனாக தன்னை இணைத்து கொண்டு செயற்பட்ட சாருமதி ஆரம்பகாலம் முதலே மிகத்தீவிரமான செயற்பாட்டாளனாக தன்னை அடையாளப்படுத்தி கொண்டார்.

> வாக்குரிமை
> வரலாற்றை ஆக்குரிமை
> இன்னும்
> பேச்சுரிமை பற்பல
> தாற்பரியங்கள் எல்லாம்
> தாராளமாய் உண்டு
> இந்த நாட்டிலே!
> கேட்பதற்கு இனிமைதான்
> ஆனால் நமக்கு
> கிடைத்ததெல்லாம் கொடுமை!
> நலம் அடித்த நாம்பன்கள்
> களம் மெய்ந்த காரணத்தால்
> இளம் பசுக்கள் எல்லாம்
> ஈன்றதாம் கன்று என்று
> பறை அடித்த ஒரு
> பைத்தியத்தின் கதைநம்பி
> தயிர் உறைக்க ஒருத்தி
> தாழியை தேடினாளாம்
> கதை எப்படி....?
> ஏனென்றால்
> இது ஒரு ஜனநாயக நாடு!
>
> (குமரன் 15 கார்த்திகை 1982இல் இது ஒரு ஜனநாயக நாடு என்ற கவிதையிலிருந்து)

இவரது அரசியல் வளர்ச்சிக்கு கிருஷ்ணக்குட்டி, சுபத்திரன், துரைரத்தினம், வெலிங்டன் ஆகியோர் பக்கபலமாக இருந்துள்ளனர். இலக்கிய வளர்ச்சிக்கு சுபத்திரனே முக்கியமானவராக இருந்தார் எனலாம்.

இவரது கவிதைகள் சமூகமாற்றத்தை வலியுறுத்தி நின்றதுடன் சர்வதேச போராட்டங்களை ஆதரித்தும் வியட்நாம், கம்போடியா, பாலஸ்தீனம், என அவரது சர்வதேச பார்வைகள் விரிந்தன.

பிற்காலங்களில் தமது ஆரம்பகால கருத்துக்களில் இருந்து வேறுபட்டவராக காணப்பட்ட சாருமதி பற்றிய முழுமையான மதிப்பீடு வெளிவருவதின் மூலமே சாருமதியின் இலக்கிய போக்கை தெளிவுபடுத்த முடியுமென்று திரு. நேசராசா தனது உரையில் குறிப்பிட்டார்.

விபவி மாற்றுக் கலாச்சார அமைப்பை சேர்ந்த திரு.ஆர். சிவகுருநாதன் சாருமதியின் "எழுத்தும் வாழ்க்கையும்" என்ற தலைப்பில் உரையாற்றுகையில் சாருமதி சமூக மாற்றத்தை விரும்பி நின்ற போராளியாகவே வாழ்ந்து மடிந்துள்ளார்.

இவர் சுரண்டல் அமைப்பை எதிர்த்ததுடன் சாதி அடக்கு முறைக்கு எதிராகவும் குரல் கொடுத்தவர். தாம் வாழ்ந்த சமூகத்தின் பல்வேறு பிரச்சினைகளையும் கவிதையில் வெளிப்படுத்தினார். எப்போதும் தீவிர செயற்பாடுள்ளவராகவும், மற்றவர்களின் நல்ல கருத்துக்களை மதிக்கும் உண்மைத் தோழனாக வாழ்ந்தார்.



இவரது கவிதைகளை பிரச்சார கவிதைகள் என பலவிமர்சகர்கள் கூறியபோதும் இவரது கவிதை உள்ளடக்கதில் சிறந்துவிளங்கியதுடன் இன்று அவரை சிறந்த கவிஞர்களுக்குள் ஒருவராக நினைவு கூரப்படுவதற்கு அவரது கவிதைகள் உரை கல்லாக உள்ளன என்றார்.

### கவிஞன்

தான் வாழ்ந்த காலப்பகுதியில் இடதுசாரி கருத்துக்களை பரப்புவதிலும் அக்கருத்தை ஏற்றுக் கொண்ட பலரை உருவாக்குவதிலும் முக்கிய பாத்திரம் வகித்தார். இவரது வாழ்வும் எழுத்தும் என்றும் உண்மையானதாகவே இருந்துள்ளது. இவரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மார்க்சிய சிந்தாந்ததினூடாக சமூக மாற்றத்திற்காக உழைப்பதே இவரது நினைவுகளை உயிர்ப்பிக்கும் என்றார் திரு. சிவகுருநாதன்.

சாருமதியின் நினைவாக மட்டக்களப்பில் உள்ள கலை இலக்கிய நண்பர்களிடம் சேகரித்த ஒரு தொகுதி நூல்களை பண்டாரியா வெளி நூல் நிலையத்திற்கு என பாலமீன்மடு வித்தியாலத்தியாலய அதிபர் திரு. இராசரெத்தினம் அவர்கள் பண்டாரியாவெளி நூலகரிடம் கையளித்தார்.

கவிஞர். வாசு தேவனின் நன்றியுரையுடன் நிறைவுற்றது.

# நாகாக்க மறந்த கதிர்காமர்

ரீ. சிறீதரன்



வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அவர்கள் ஐ. நாவின் அமைப்புக்கள் நுளம்புகளுக்கு மருந்து அடிக்கும் வேலையை மாத்திரம் பார்த்துக்கொள்ள வேண்டும் வேறு எந்த விவகாரங்களிலும் தலையிடக்கூடாது என்றும் மூன்றாவது சக்தியின் தலையீடு எக்காலத்திலும் இனப்பிரச்சினை விவகாரத்தில் சாத்தியம் இல்லை என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இது தமிழ்க்கட்சிகளினால் கடுமையாக ஆட்சேபிக்கப்பட்டது. குறிப்பாக ஈ.பி.ஆர்.எல்.எவ்வும், த.வி.கூவும் தமது கடுமையான ஆட்சேபனையைத் தெரிவித்திருந்தன.

கதிர்காமர் அவர்கள் சிறிய நாடுகளின் இறைமை என்பதுபற்றியே கூடுதலாக கவலை கொண்டிருந்தார். இதனை இங்குள்ள ஆங்கில, சிங்கள பத்திரிகைகளும் பற்றிப்பிடித்து அளவுக்கு மிஞ்சி தலையில் வைத்து ஆடத்தொடங்கின.

கதிர்காமரின் இந்த பேச்சு "டெயிலிநியூஸ்" பத்திரிகையின் தலைப்புச் செய்தியாக இடம் பெற்றது. அதேபோல "ஐலன்ட்" பத்திரிகையின் தலைப்புச் செய்தியாகவும், ஆசிரியர் தலையங்கமாகவும் இடம் பெற்றது. தீவுப்பத்திரிகை ஐ.நாவோ, மேற்கத்திய நாடுகளோ தலையிட்ட நாடுகளில் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லையென சுட்டிக்காட்டியிருந்தது.

பொஸ்னியாவிலோ அல்லது கோசோவாவிலோ அல்லது தற்போது கிழக்கு திமோரிளே பிரச்சினைகள் தீரவில்லை அதிகரித்திருக்கின்றன என்று குறிப்பிட்டிருந்தது. இவர்கள் செச்சினியாவில் தலையிடுவார்களா என்றும் கேட்டிருந்தது.

ஐ.நாவின் தலையீடு பிரச்சினையை தீர்க்குமா இல்லையா என்பதும் மேற்கத்திய நாடுகள் கருதும் இடங்களில் தான் தலையீடு நடைபெறுகிறது என்பதும் பாசீலனைக்குரிய விடயங்களே ஆயினும், இலங்கையில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான உள்ளார்ந்த ஆற்றல் இழக்கப்பட்டிருக்கிறது என்பதும் இனப்பிரச்சினையை தீர்ப்பதிலும் சரி, யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதில் சரி இலங்கையின் அரசியலாளர்கள் கையாலாகதவர்களாக இருந்து வருகிறார்கள். ஆனால் இதுவரை 55ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டு விட்டன.

பிரச்சினை குறிப்பாக 1983ல் இருந்தே சர்வதேச பரிமாணத்தை பெற்றுவிட்டது. ஈழத்தமிழர் பிரச்சினை உலகின் முக்கிய பிரச்சினைகளான பாலஸ்தீன பிரச்சினை, தென்னாபிரிக்க மக்களின் நிறவெறிக்கெதிரான போராட்டங்களுக்கு அடுத்த படியாக சர்வதேச அளவில் அறியப்பட்ட பிரச்சினையாக இருந்தது. இலட்சக்கணக்கான தமிழ்மக்கள் உலகமெங்கும் பரந்து புகலிடம் தேடியுள்ளார்கள்.

1983 இலும் தொடர்ந்தும் தமிழ் மக்கள் மீது தொடுக்கப்பட்ட மிகமோசமான வன்முறைகள் ஒடுக்குமுறைகள் எல்லாம் சர்வதேசங்களினதும் அவதானத்திற்கு உட்பட்டன என்பதும் மறுப்பதற்கில்லை.

1983 இனவன்முறையைத் தொடர்ந்து மறைந்த பாரதப்பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் ஈழத்தமிழர் படுகொலை தொடர்பாக தனது ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்ததும், இந்திய இராஜதந்திரி பார்த்தசாரதி அவர்கள் இலங்கைக்கு வருகைதந்ததும் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காணும் சாத்தியப்பாடுகள் ஆராயப்பட்டதும் ஒன்றும் தற்செயலானதல்ல. தொடர்ந்து 1985ல் இலங்கை அரசும் தமிழ் அரசியல் தலைமைகளும் இந்தியாவின் மத்தியஸ்தத்துடனேயே தீம்புவில் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டன. அதன் பின்னரும் முன்னரும் பல தடவை இந்திய வெளிவிவகார அமைச்சர்கள், அமைச்சு அதிகாரிகள் பல்வேறு பேச்சுவார்த்தைகள் கலந்துரையாடல்களை தமிழ் அரசியல் இயக்கங்களுடனும் இலங்கை அரசுடனும் நடத்தியுள்ளனர்.

1987ல் இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகி அதனடிப்படையில் உருவாகிய மாகாணசபைகள் வட-கிழக்கைத் தவிர இன்றும் செயற்பட்டுக்கொண்டிருப்பதும் யதார்த்தமானதே. இவை எல்லாம் மூன்றாவது சக்தியின் தலையீட்டினூடாக வந்தவை.



ஏன் சில வருடங்களுக்கு முன்னர் ஆளும் தரப்பும் எதிர்க்கட்சியும் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் இணைந்து செயற்படவேண்டும் என்பதற்காக கையெழுத்திடப்பட்ட "லியம்பொக்ஸ்" உடன் படிக்கையின் அர்த்தம் என்ன?

பல்வேறு நாடுகளில் தலைவர்கள், சர்வதேச நிறுவனங்கள், மற்றும் அமைப்புக்கள் தொடர்ச்சியாக ஈழத்தமிழர் பிரச்சினையைப்பற்றி பேசி வந்திருக்கின்றனவே இவை எல்லாம் கதிர்காமருக்கு தெரியாதா?

இப்போது புதிதாக சிறிய நாடுகளின் இறைமை என்று பேசிவருகிறார். மிகமோசமான மனித உரிமை மீறல்கள் நடைபெறும் போது, யுத்தத்தில் சம்பந்தப்படாத அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படும் போது சர்வதேச அளவில் அவைபற்றி கேள்வி எழும் போதே நாட்டின் இறைமைபற்றி அடிக்கடி பேசப்படுகிறது.

நாட்டின் இறைமை, பிரதேச ஒருமைப்பாடு என்பதெல்லாம் சம்பந்தப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களையும் உள்ளடக்கியதே. அந்த மக்களின் அழிவுடனான, வெளியேற்றத்துடனான பிரதேச கைப்பற்றல்கள் மாத்திரம் இறைமையாகி விடாது.

இன்று எந்த நாட்டிலும் இன ரீதியான ஒடுக்குமுறை, ஏனைய அடிப்படை மனித உரிமை மீறல்கள், பெண்கள், சிறுவர்கள் மீதான ஒடுக்குமுறைகள் சர்வதேச கவனத்திற்குரியவை.இவைபற்றிய கேள்விகளுக்கு சம்பந்தப்பட்ட நாடுகளும் பதில் அளிக்கப்பட்டவை. இவற்றையிட்டு ஆத்திரமடைவதோ சர்வதேச நிறுவனங்களின் பணிகளை நுளம்புக்கு மருந்து அடிக்கும் வேலை என மலினப்படுத்துவதோ நாகரிகமானதோ, சாணக்கியமானதோ அல்ல.

ஈழத்தமிழர் பிரச்சினையில் மூன்றாவது சக்தியின் தலையீடு தொடர்ச்சியாக வலியுறுத்தப்படும் விடயமாகும். இலங்கையில் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுவதற்கு சர்வதேச ஒத்துழைப்பைக் கேட்கும் அரசு, சர்வதேச கடனுதவிகளை நாடும் அரசு இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் மாத்திரம் சர்வதேச தலையீடு கூடாது என்று கூறுவது பேரினவாத நிலைப்பாடே.

அந்த நிலைப்பாட்டை பிரதிபலிப்பதாகவே கதிர்காமர் அவர்களின் அறிக்கை அமைந்துள்ளது.

உலக கிராமத்தைப்பற்றிய கருத்துக்கள் வளர்ச்சியடைந்திருக்கும் காலத்தில், தென்னாசிய அளவில் பரஸ்பர ஒத்துழைப்பைப்பற்றி பேசுபவர்கள் பொருளாதார, கலாச்சார உறவுகளில் அக்கறை செலுத்துவதாக காட்டிக்கொள்பவர்கள் சர்வதேச பங்களிப்பு இலங்கையில் இனப்பிரச்சினை தீர்வில் மாத்திரம் இருக்கக்கூடாது என்பது நியாயமானதல்ல.

இனப்பிரச்சினையை தீர்க்கிறோம் அதிகாரப்பரவலாக்கலினூடாக என்று கூறிக்கூறியே ஐந்து வருடங்கள் கடந்த பின்னரும் சர்வதேச பங்களிப்பை நிராகரிப்பது எந்த விதத்தில் நியாயமாகும்.

அவ்வாறானால் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது எவ்வாறு என்று கேட்டால் அவரிடம் தெளிவான பதில் கிடையாது.

சர்வதேச பங்களிப்புடன் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான வழிவகைகளை விடுத்து பிரச்சனையை அடுத்த நூற்றாண்டுக்கு கொண்டு செல்லும் ஆக்க பூர்வமான யோசனைகளற்ற தன்மையே மூன்றாவது சக்தியின் தலையீட்டை விரும்பாமையில் காண முடிகிறது.

கிரிக்கெட் விளையாட்டுக்கும் மற்றும் ஓட்டப்பந்தயங்களுக்கும் சர்வதேச அந்தஸ்தத்தை பெறவிரும்பும் இலங்கை இனப்பிரச்சினை தீர்வில் மாத்திரம் சர்வதேச பங்களிப்பை வேண்டாம் என்பது முறையற்றது. அது மாத்திரமல்ல திருமலையை சமாதான நகராக்கும் யுனெஸ்கோவின் சிபார்சை வரவேற்றவர்கள் நீங்கள்.

அப்படியானால் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் கபடத்தனம் ஒழிந்து கிடக்கிறதா?

நாம் இங்கு மூன்றாவது சக்தி வரவேண்டும் புலிகளும் அரசும் பேசவேண்டும் என்று கோரவில்லை. இங்கு நியாயபூர்வமான அரசியல் தீர்வு உருவாகுவதிலும், ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதிலும், மனித உரிமைகளை நிலைநாட்டுவதிலும் உறுதியான பங்களிப்பை 3வது தரப்பினர் வழங்க முடியும்.

கிழக்கு திமோர் சிலவேளை இவர்களுக்கு அச்சமூட்டுவதாக இருக்கலாம். நியாய உணர்வுள்ள சமூகத்தினர் கிழக்கு திமோரில் நடைபெற்றதை ஆதரிக்க வேண்டும்.

தென்கிழக்காசியாவில் எமது நாட்டுக்கு கிட்டவாக அங்கு அவர்களின் சுயாட்சிக்கான சர்வஜன வாக்கெடுப்பொன்று நடைபெற்றது. அதன் பின்னர் ஐ.நா படைகள் சென்றது இங்கு பேரினவாதிகளுக்கு விருப்பமில்லாத சங்கதிகளே!

ஆனால், 1975ல் போர்த்துக்கல்லிடமிருந்து சுதந்திரம் பெற்ற கிழக்கு திமோரை இந்தோனேசியா இணைத்துக்கொண்டது. இங்கு அதுவல்ல சங்கதி.

இனங்களின் உரிமை, அபிப்பிராயம் பற்றி உலக அளவில் உருவாகிவரும் கருத்துக்களும் ஒரு உருப்படியான தீர்வு உருவாகுவது தொடர்பில் சர்வதேச அளவிலும், உள்நாட்டிலும் ஏற்பட்டிருக்கும் அக்கறை தேர்தல் காலத்தில் சமயப் பொருத்தமில்லையென இனவாதிகள் எண்ணக்கூடும்.

அரசு முன்வைத்த தீர்வுத்திட்ட யோசனைகள் தேய்ந்து அதைப் பற்றி அபிப்பிராயம் சொல்லிச் சலித்துப்போன நிலை காணப்படுகிறது. அந்த யோசனைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாமலே நாங்கள் தீர்வுக்கு முயற்சித்தோம் என்று கூறிக்கொண்டே தேர்தல்களுக்கு செல்லப்போகிறார்களா? அல்லது இந்த ஆட்சியின் கடைசிக்கணங்களில் பாராளுமன்றத்தில் வைத்து முயற்சிக்கப்போகிறார்களா? எதுவுமே நிச்சயம் அற்ற நிலையே! இந்த நிலையில் தமிழ்க்கட்சிகளோ, தமிழ் மக்களோ ஒரு நிலைப்பாட்டை எடுப்பது மிகக்கடினமானதே.

ஒரு புறம் தமிழ் மக்களை அழிவுப்பாதையில் வழிநடத்தும் பிற்போக்கு தமிழ் குறுந்தேசியவாதிகள் மறுபுறம் இனப்பிரச்சனைக்கு தீர்வை முன்வைப்பதில் ஐ.தே.கவின் ஒத்துழைப்பின்மை. பேரின வாத நெருக்கடிகளால் தடுமாறும் அரசு. இங்கு நியாயமாக ஏதும் நடக்கும் என்று எதிர்பார்க்க முடியாத நிலை காணப்படுகிறது.

இந்த நிலையில் சர்வதேச ஒத்துழைப்பு எதிர்பார்க்கப்படுவதும் அது பெறப்படுவதும் யாதார்த்தமானதே. அது அவசியமானதும் கூட. ■

## பொம்(ய்)மை.......

12ம் பக்கம் தொடர்ச்சி

இதற்கு சமீபத்திய சிறந்த உதாரணமாக உதயன் பத்திரிகைக் காரியாலயம் மீதான தாக்குதலில் பின் வெளியான கண்டனங்களைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். பத்திரிக்கைக் காரியாலயம் மீதான தாக்குதல் கண்டனத்திற்குரியதே.

யாழ் குடாநாடு இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் வந்த பின்னர் தோன்றிய குறைந்தபட்ச ஜனநாயக சூழலில் புத்துயிர்பெற்று, அரங்கிற்கு வந்திருக்கும் சில தமிழ் வெகுஜன அமைப்புக்கள் மக்களின் உரிமையை நிலைநாட்டுவதற்காக, அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்காகப் பாடுபடுகின்ற, அதேவேளை மக்களுக்கு சேவை செய்வதாக நினைத்துக்கொண்டு, காட்டிக்கொண்டு தமிழ் மக்கள் தற்போது அனுபவிக்கின்ற அடிப்படை உரிமைகள், வசதிகள் கூட கிடைக்காது எதிர்த்து நின்று இன்றைக்குச் சாதிக்கக்கூடியவற்றில் சிறு அளவைத்தானும் தங்களாலேயே சாதிக்க முடியாது என்று தெரிந்த ஒரு பொறிக்குள் தமிழ்மக்கள் சிக்கிக்கொள்வதற்கும் காரணமாய் உள்ளார்கள் என்பது வருத்தத்திற்குரியது.

தமிழ் மக்கள் சுதந்திரமாகத் கருத்துத் தெரிவிக்கமுடியாத தொரு சூழலிலே இப்போதும் வாழ்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். மீறி யாரேனும் கருத்துச் சொல்ல முற்பட்டு, அது புலிகளுக்குப் பிடிக்காமல் போனால், துரோகிகள் என்று முத்திரை குத்தப்படுவதும் தெரிந்த விடயம்.

புலிகளிடம் துரோகிகள் என்ற பெயரெடுக்காமல் மக்களுக்கு எந்த துரோகத்தையும் செய்யத்தயாராயிருப்பவர்கள் சமூகத்தின் காவலர்களாய், தியாகிகளாய் வலம்வரலாம் புலிகள் சார்பாகப் பேசுபவர்களும், புலிகளின் எதிரிகளுக்கு எதிராகப் பேசுபவர்களும் மாத்திரமே இங்கு பேச்சுச் சுதந்திரம், கருத்துச்சுதந்திரம் உடையவர்களாய் உள்ளனர்.

தமிழ் வெகுஜன அமைப்புக்களையும் இந்த அடிப்படையிலிருந்தே நோக்க முடியும். இத்தகைய சூழலில் தமிழ் வெகுஜன அமைப்புக்களால் மக்களின் உண்மையான இடர்பாடுகள், தேவைகள் அபிலாசைகளை எந்தளவிற்கு வெளிப்படுத்த முடியும் என்பதற்கு விடை கண்டு செயற்படவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு. ●

# புலிகள் ஊடுருவல்-வவுனியா நகரம் போர்க்களமாக மாறும் அபாயம்!

## புலிகள் எதிர் இராணுவம்

என்.ஆர்.சோமு



ரணகோஷ-1-2-3-4 நான்கில் வன்னியின் மேற்கு நிலப்பரப்பில் கால்பதித்த இராணுவம்-தொடர்ந்தும் முன்னேற ரணகோஷம்-5 இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தது. ஆனால் இந்த ரணகோஷம்-இராணுவத்திற்கு ரணங்களாகவே மாறின. 140 வீரர்கள் கொல்லப்பட்டும் 600 வீரர்களுக்கு மேல் காயப்பட்டும் பின் வாங்கவேண்டியே இருந்தன.

‘சாண் ஏற முழம் சறுக்குவது போல்’ நீண்டகாலமா நடந்து வரும் யுத்தத்தில் இந்த ஏற்ற இறக்கங்கள் தவிர்க்கமுடியாது. இருப்பினும் அவசரகோலத்தில் களநிலைமை அறியப்படாமல் யுத்தத்தில் இறங்குவது ஆபத்தானதாகும்.

ரணகோஷ நான்கிலும் இலகுவாக முன்னேற முடிந்ததை கணக்கில் வைத்து ஐந்தாவதைக் கோட்டை விட்டிருக்கிறார்கள். இராணுவக் கணிப்பீட்டில் கணக்கு பிசகுமானால் பல உயிர்கள்தான் அநியாயமாக பலியாகும். ரணகோஷ-5 இராணுவ நடவடிக்கையின் இழப்புகளும் அதைத்தான் காட்டி நிற்கின்றது.

விடுதலைப்புலிகளின் தந்திரோபாயம் என்ன. அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்பதைப் பற்றி கடைசியாக வெளிவந்த எமது புதியகண்ணோட்டம் இராணுவக் கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தோம்.

★ வவுனியா-மாங்குளம் பாதை அகதிகளின் போக்குவரத்திற்காக திறக்கப்பட்ட பின் புலிகள் அங்கிருந்த தமது படை அணிகளை மேற்கு நோக்கி நகர்த்துவார்கள். மன்னார்-சங்குப்பிட்டி பாதையிலும்-அதனைச்சுற்றியுள்ள பிரதேசங்களிலும் இராணுவத்தை எதிர்கொள்ள நிறுத்தி வைக்கப்படுவார்கள். இராணுவத்தின் முன்னேற்றம் புலிகளின் கடுமையான எதிர்த்தாக்குதலுக்கு உள்ளாகும். (5 புரட்டாதி99-புதியகண்ணோட்டம்)



மரபுப்போர் முறையில் நன்கு தேர்ச்சி பெற்ற இராணுவத்தினரை தனது பிரதேசத்திற்குள் உள்வாங்கி புலிகள் தாக்கியிருக்கிறார்கள். அத்துடன் இராணுவத்தினரை தமது நிலைகளுக்கு பின்வாங்கவும் செய்திருக்கிறார்கள். இதன் மூலம் தமது பலத்தை மீண்டும் ஒரு முறை நிரூபித்திருக்கிறார்கள் புலிகள்.

ஜெயசிக்குறு நடவடிக்கையை புலிகள் தடுத்து நிறுத்தியதன் பின் இந்த ரணகோஷ-5 இராணுவ நடவடிக்கையை நிறுத்தியிருக்கிறார்கள். இது இராணுவத்திற்கு பின்னடைவை ஏற்படுத்தியிருக்கும் ஒரு எதிர்த்தாக்குதலாகும் மரபுப்போர் முறையிலும்-கெரில்லா போர் முறையிலும் இராணுவத்தை எதிர்கொள்ளும் புலிகள் தமது இழப்புக்கள் பற்றிக் கவலைகொள்வதில்லை. யுத்தம் செய்வதிலேயே முனைப்பாக இருக்கிறார்கள்.

புலிகளை இராணுவரீதியில் பலவீனப்படுத்தினால் பேச்சுவார்த்தைக்கு வருவார்கள் என்ற அரசின் தப்புக்கணக்கு ஐந்து வருடங்களைத் தாண்டித் தொடர்கிறது. விடுதலைப்புலிகள் அசைந்து கொடுப்பதற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை. எங்கே போய் இந்த யுத்தத்தை நிறுத்திக் கொள்வது-என்று திக்குத்திசை தெரியாமல் போய்க்கொண்டிருக்கும் இருசாராரையும் பிடித்து நிறுத்துவதற்கு-இவர்களை விட பலமான ஒருவர் வந்தால் தான் முடியும். இல்லையானால் இந்த யுத்தம் தொடரும்.

குணப்படுத்த முடியாத ஒரு கான்சர் வியாதியைப் போல்தான் ஒரு கெரில்லாப் போர் முறையும். இராணுவம் ஒரு இடத்தில் அழிக்கப்போனால்-அது இன்னொரு இடத்தில் புட்டுக்கொண்டு வெளிவரும். அதுவும் இனப்பிரச்சனையை ஒரு முற்று முழுதான யுத்தத்தால் தீர்க்கப்போனால் விளைவு விபரீதமாகவே இருக்கும். அதுதான் இன்று நடந்து கொண்டிருக்கிறது.

ஜெயசிகுறு-ரணகோஷ இராணுவ நடவடிக்கைகள் மூலம் விடுதலைப்புலிகளை காடுகளில் இருந்து விரட்டப்போய்-அவர்கள் மக்கள் செறிந்து வாழும் நகரங்களுக்குள் புகுந்து தாக்கத் தொடங்கியிருக்கிறார்கள். குறிப்பாக அமைதியாக இருந்த வவுனியா நகரம் இன்று அல்லோல கல்லோலப்படுகிறது.

ஒரு வருடத்திற்கு முன்பு இருந்த வவுனியா நகரம் இன்றில்லை. நகரத்தின் மத்தியில் பட்டப்பகலில் இராணுவத்தினரையும்-பொலிசாரையும்-மாற்றுக்கட்சிப் போராளிகளையும் மிக இலகுவாக தாக்கிக் கொல்வதில் புலிகள் வியக்க வைக்கிறார்கள். மின்மாற்றிகளைத் தகர்த்தெறிந்து மக்களையும் இம்சைக்குள்ளாக்கிறார்கள். இது தொடருமானால் வவுனியா நகரில் இருந்தும் மக்கள் வெளியேறத் தொடங்குவார்கள்.

எப்படிப் பாதுகாப்பாக இருந்த வவுனியா நகரம் இப்படிப் போய் விட்டது. வவுனியா நகரிலிருந்து வடக்கே தாண்டிக்குளம் வரை-மேற்கே பூவரசங்குளம் வரை-கிழக்கே கொறவபொத்தானை வீதி, சிதம்பரபுரம் வரை தெற்கே ஈரப்பெரியகுளம்-செட்டிகுளம்வரை ஒரு அகன்ற பாதுகாப்பு வலயமாக இப்பிரதேசம் கண்காணிக்கப்பட்டு வந்தது.

இந்தக் காலகட்டத்தில் வவுனியா நகருக்குள் புலிகள் வருவதற்கே அஞ்சினர். காலப்போக்கில் இராணுவத்தினர் அகலக்கால் வைக்கப் போனதின் விளைவு-பாதுகாப்பு அரண்களில் ஓட்டை விழத் தொடங்கின.

முதலில் ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையாலும் பின்பு ரணகோஷ நடவடிக்கையாலும் பாதுகாப்பு தளரத் தொடங்கியது. வவுனியாவில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இராணுவத்தினரில் ஒரு பகுதியினர் இந்த இரு யுத்த நடவடிக்கைகளுக்காக இடமாற்றப்பட்டு ஈடுபடுத்தப்பட்டனர்.

அந்த யுத்தத்தில் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட வன்னியின் மேற்கு நிலப்பரப்பின் ஒரு பகுதியின் பாதுகாப்புக்கடமைக்காக மேலும் துருப்புக்கள் தேவைப்பட்டனர். ஆகவே வவுனியாவிலிருந்து இன்னொரு தொகைப் படையினர் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன்ர். காடுகளுக்குள் பாதுகாப்பு பலமானது-நகரத்திற்குள் பலவீனமானது.

இதனை பயன்படுத்தி புலிகளும் ஊடுருவத் தொடங்கினர். ரணகோஷ நடவடிக்கையால் இராணுவம் கைப்பற்றிய பிரதேசங்களில் இருந்து மக்களோடு மக்களாக புலிகளும் இராணுவத்தின் பாஸ் நடைமுறை மூலம் வவுனியா நகருக்குள் வந்து போக முடிந்தது.

இது புலிகளுக்கு இலகுவான வழியை ஏற்படுத்திக் கொடுத்தது மட்டுமல்லாது-இராணுவ இலக்குகளை அறிந்து கொள்ளக் கூடியதாகவும் இருந்தது. அத்துடன் புளொட்-ரெலோ இயக்கங்களுக்கிடையிலான ஆயுத மோதல்களும் புலிகளுக்கு சாதகமாகவே இருந்தன. இயக்கங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி அழிந்து போவதற்கும், இராணுவத்தினர் இயக்கங்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் புலிகள் பல வதந்திகளையும் பரப்பினர். அதில் ஒன்றுதான் ‘இயக்கங்களுக்குள் புலிகள் ஊடுருவியிருக்கிறார்கள் என்பது’.

இந்த வதந்தியை நம்பி முதலில் மிரண்டவர்கள் இராணுவத்தினர்தான். அப்படியிருக்குமோ-இப்படியிருக்குமோ என அஞ்சி ஆயுதக் களைவிலும் ஈடுபட்டனர். புலிகளால் பரப்பப்பட்ட இந்த வதந்தியால் இன்று இராணுவத்தினருக்கும்-இயக்கங்களுக்கிடையில் இருந்த உறவில் சற்று விரிசலும் உண்டாகியுள்ளது. இது ஒரு வகையில் புலிகளுக்கு வெற்றி என்றே சொல்லலாம்.

வவுனியா நகரையும்-அதனை அண்டியுள்ள கிராமங்களையும் பாதுகாப்பதற்கு போதுமான இராணுவத்தினர் இல்லையானால் புலிகளின் ஊடுருவல் தொடரும் ஆபத்தே இருக்கிறது. ஏனென்றால் வவுனியாவின் கிராமங்கள் காடுகளால் சூழப்பட்டிருப்பதால் புலிகள் நகருக்குள் வந்து போவது சுலபம்.

தாக்குதலில் பங்கேற்பவர்கள் நகருக்குள் தங்கியிருக்க வேண்டிய அவசியமுமில்லை. வந்து-இராணுவ இலக்குகளை தாக்கி விட்டு காட்டுக்குள் தப்பிச் சென்று விடலாம்.

இவற்றுக்கப்பால், பொதுமக்கள்-இராணுவத்திற்கு இடையில் சுமுகமான நல்லுறவு இருப்பதாகத் தெரியவில்லை. பயந்த நிலையிலேயே மக்கள் வாழ்கிறார்கள். விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளால் ஏற்படும் அசௌகரியங்களை பொறுமையுடன் தாங்கிக்கொள்கிறார்கள்.

பாஸ் கெடு பிடிகள்-வீதிச்சோதனைகள்-போக்குவரத்து நெருக்கடிகள் தினம் தொடரும் வேதனைகள். யுத்தத்தால் பாதிக்கப்படும் மக்களை சட்டம்-ஒழுங்கை நடைமுறைப்படுத்துபவர்கள் தமிழர்கள் என்ற இனக்குரோதத்துடன் பார்க்கும் நிலையே இருக்கிறது.

இந்த அணுகுமுறை மாற்றப்படல் வேண்டும். இராணுவ இலக்குகளை விடுதலைப்புலிகள் தாக்கும்போது அதை ஒரு ஸ்போட்டிவ்வாக எடுத்தக்கொள்ளும் மனப்பக்குவம் இராணுவத்திற்கு இருந்தால் அப்பாவி மக்கள் தாக்கப்படுவது இல்லாமல்போகும். அது தொடரும் பட்சத்தில் பொதுமக்கள்-ராணுவத்தினரின் நல்லுறவு வளரும். கடந்த 19வருடங்களாக நடந்துவரும் ஆயுத மோதல்களால் தமிழர்கள்தான் அதிகமாகப் பாதிக்கபட்டிருக்கிறார்கள்.

கெரில்லாத் தாக்குதலால் ஆத்திரமூட்டப்படும் இராணுவம் பொது மக்களைத் தாக்கும் போது அது புலிகளுக்கு இலாபம். அதற்கு மாறாக இராணுவம் சகிப்புத் தன்மையுடன் மக்களை அரவணைக்கும் போது அது புலிகளுக்கு நட்டம். ஆகவே இந்த நடைமுறையை இராணுவம் பின்பற்றினால் விடுதலைப் புலிகள் தனிமைப்படுத்தப்படுவார்கள்.

இந்த மாற்றத்தைத் தான் தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இராணுவ அதிகாரிகள் தமது படை அணிகளின் தரத்தை உயர்த்தி தமிழ் மக்களுடன் ஒரு சிநேகபூர்வமான நட்பை உருவாக்க வேண்டும். மொத்தத்தில் இராணுவத்தினரைக் கண்டு தமிழ் மக்கள் பயந்து-ஒடுங்கும் நிலை மாற வேண்டும்.

ஆனால் முழுக்க முழுக்க சிங்களவர்களை கொண்டிருக்கும் இந்த நாட்டின் இராணுவத்தால் இது சாத்தியமாகுமா? இதுவும் ஒரு நியாயமான கேள்விதான். எதற்கும் பொறுத்திருந்துதான் பார்ப்போம். ●

# விமானக் குண்டுவீச்சில் கொல்வதா வெட்டிக்கொல்வதா மனிதாபிமானது


## கொலைகாரர்களின் விவாதம்

புதுக்குடியிருப்பில் நடைபெற்ற விமானத்தாக்குதலில் 22 பொறுமக்கள் படுகொலை செய்யப்பட்டு 30க்கு மேற்பட்டோர் காயப்பட்டது தொடர்பாக அரசின் இராணுவச் செய்தித் தொடர்பாளர் தெரிவித்த செய்தி நேர்மையின்மை, பொய் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது; என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது.

அதுவும் புதுக்குடியிருப்பு நகரத்தின் மையத்தில் வயோதிபர்கள், பெண்கள், சிறுவர்கள் படுகொலை செய்யப்பட்டதை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் பொதுமக்கள் தான் படுகொலை செய்யப்பட்டார்கள் என்பதை ஊர்ஜீதம் செய்த பின்னரும் அரசு தரப்பில் இந்தப்படுகொலை ஒப்புக்கொள்ளப்படவோ, மன்னிப்புக் கேட்கப்படவோ, அல்லது விசாரணை நடத்தப்படவோ இல்லை. அதுவும் பத்தோடு பதினொன்றாக கணக்கிடப்பட்டு விட்டது.



முக்கியமாக தமிழர்களது உயிர் தொடர்பாக அரசின் மனோபவம் என்ன என்பதையே இந்த ஈனச் செயல் எடுத்துக் காட்டுகிறது. சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம் தெரிவித்த பின்னர் கூட இந்தப்படுகொலை தொடர்பான எந்தப் பிரதிபலிப்பையும் அரசு காட்டவில்லை.



யுத்த முனையில் ஏற்படும் பின்னடைவுகளுக்காக அல்லது தாம் எரிச்சலூட்டப்படுவதற்காக பொது மக்களை சாக்காட்டுவது பேரினவாதத்தின் பாரம்பரிய தர்மம். கடந்த 20வருடங்களுக்கு மேலாக இதுதான் நடைபெற்றுவருகிறது.

ஒரு நாடு ஒரேமக்கள் இறைமை ஆகியவற்றுக்கு இவர்கள் கொடுக்கும் அர்த்தம் என்ன?

இவர்களின் மனோபாவத்தில் மக்கள் என்பது சிங்கள மக்கள் மாத்திரமே. நாடு என்பதும் நிலப்பரப்பு ஆனால், சிங்களவர்கள் தவிர்ந்தவர்கள் மக்களல்ல என்றாகிறது.

அம்பாறைப் படுகொலை தொடர்பாக அரசு எடுத்துக்கொண்ட கரிசனையும் புதுக்குடியிருப்பு தொடர்பாக அவிழ்த்து விடப்பட்ட பொய்யும் புரளியும் அதைத்தான் புலப்படுத்துகிறது.

தமிழர்கள், சிங்களவர்கள் படுகொலை செய்யப்பட்டதற்காக சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம், சர்வதேச மன்னிப்புச்சபை மற்றும் மனித உரிமை அமைப்புக்கள் கண்டித்துள்ளன. ஆனால் இந்நாட்டு அரசு அம்பாறை படுகொலைகளை மாத்திரமே ஊர்ஜீதம் செய்கிறது.

இதில் தற்போதைய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசினால் குற்றஞ்சாட்டப்பட்ட ஐ.தே.கவின் 17வருட ஆட்சியில் இது போன்ற சம்பவங்கள் தொடர்பாக தற்போதைய இராணுவச் செய்தித் தொடர்பாளரினால் வெளியிடப்பட்டது போன்ற பொய்ச் செய்திகளே வெளியிடப்பட்டன.

பொதுமக்கள் படுகொலை செய்யப்படுகிற போது அதனைப் பயங்கரவாதிகளாகக் கணக்கிட்டுச் சொல்வது இலங்கைப்படைகளின் வழக்கமான நடவடிக்கை. கடுமையான சர்வதேச, உள்நாட்டு அழுத்தங்கள் வரும்போதே உண்மைகள் அரைகுறையாக ஒப்புக் கொள்ளப்படுகின்றன.


பத்திரிகையாளர்கள் உங்களது விமானங்கள் தவறிழைத்திருக்க வாய்ப்பில்லையா என்று கேட்டதற்கு அதற்கு வாய்ப்பில்லை என்றே பதில் தரப்பட்டது. புதுக்குடியிருப்புச் சந்தைப் பகுதி பொய்யர்களால் பயங்கரவாதிகளின் இருமுகாம்களாக மாற்றப்பட்டுள்ளன.

போதாக்குறைக்கு "லக்கிஅல்கம" என்ற இராணுவ அதிகாரி ஒருவர் சந்தைப்பகுதி பொதுமக்களுடன் கலந்து நின்றிருப்பார்கள் என்று ரி.என்.எல் கலந்துரையாடல் ஒன்றில் குறிப்பிட்டார்.

மற்றது குண்டு போட்டவர்களும் பயங்கரவாதிகளும் வித்தியாசமானவர்கள். விமானத்திலிருந்து குண்டு வீசியவர்கள் பயிற்றப்பட்ட படைவீரர்கள் என அம்பாறையில் தாக்குதல் நடத்தியவர்கள் பயங்கரவாதிகள் என மேலும் கூறுகிறார். உண்மையில் பொதுமக்கள் இலக்குகள் மீது தாக்குதல் நடத்த உத்தரவிடுவோர் அதனைச் செய்வோர், பாலியல் பலாத்காரத்தில் ஈடுபடுவோர், அப்பாவிகளைப் படுகொலை செய்து புதைத்தோர் அதற்கு உத்தரவிடுவோர், உடந்தையாக இருப்போர் அவர்கள் எத்தகைய பயிற்சி பெற்ற படையினராக இருப்பினும், எத்தகைய உயர்பதவிகளில் இருப்பினும் கடைந்தெடுத்த மிருக உணர்ச்சியாளர்களே! இதில் சந்தேகம் கொள்ள எதுவுமில்லை.

இதேபோல் தான் நவாலி தேவாலயத்தின் மீது குண்டு வீசி பொதுமக்கள் பலி கொல்லப்பட்ட போது, சில வருடங்களுக்கு முன் வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட போது பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாகத் தான் கூறப்பட்டது.

கொக்கட்டிச்சோலை, குமாரபுரம் படுகொலை சம்பவங்கள் பல்வேறு உள்ளூர் வெளிநாட்டு நெருக்குவாரங்களால்தான் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. ஆனால் யாரும் அப்படுகொலைகளுக்காகத் தண்டிக்கப்படவில்லை.



வந்தாறுமூலை பல்கலைகழகத்தில் அகதிகளாக இருந்தவர்கள் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட போது அதற்கு கண்கண்ட சாட்சிகள் கூட இருக்கின்றன. அதில் சம்பந்தப்பட்டவர்கள் உயர் இராணுவ பதவிகளில் இருக்கிறார்கள் ஐ.தே.க ஆட்சிக்காலத்தில் நடந்திருந்தால் கூட இந்த அரசும் மௌனத்தைத்தான் கடைப்பிடிக்கிறது. அந்தப்படுகொலையிலும் பெண்களும், சிறுவர்களும், குழந்தைகளும் அடக்கம்.

யாழ்ப்பாணத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பான கேள்விக்கு பதில் கிணறுவெட்ட பூதம் புறப்பட்ட கதையாக சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி பாலியல் பலாத்காரப்படுகொலையில் குற்றவாளியாக காணப்பட்ட சோமரத்தின ராஜபக்ஷ நான் குற்றவாளியானால் செம்மணியில் ஆட்களை கொன்று குவித்த படை அதிகாரிகளும், படையினரும் யாரென்று கேள்வி எழுப்பி அதில் சம்பந்தப்பட்ட தன்னுடைய சகாக்கள் பற்றியும் தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் உதவி வழங்கும் நாடுகள், உள்ளூர் அழுத்தங்களின் விளைவாகத்தான் செம்மணி அகழ்வு வேலைகள் ஆரம்பித்தன.

காணாமல் போனவர்களின் உற்றாரும், உறவினர்களும் தெருத்தெருவாக அலைந்த போது, கோயில்களின் முன்னாலும் தேவாலயங்களின் முன்னாலும் உண்ணாவிரதம் இருந்த போது, விசாரிக்கிறோம் கண்டுபிடிக்கிறோம் என அரசு தரப்பிலும் இராணுவ தரப்பிலும் பாசாங்குத்தனமே வெளிப்பட்டது.

1996ம் ஆண்டு காணமல்போனவர்களின் புதைகுழிகள் செம்மணியில் இருப்பதாக 98 முற்பகுதியிலேயே தெரிவித்திருந்த போதும் 99 இறுதிப்பகுதியில் தான் அகழமுடிந்தது.

இத்தகைய ஒரு புதைகுழி தென்பகுதியில் இருப்பதாக அறியப்பட்டிருந்தால் அது ஐ.தே.கட்சியின் காலத்தானதாக இருந்தால் அரசு தரப்பினர் மண்வெட்டி, பிக்கானுடன் உடனடியாவே ஸ்தலத்தில் நின்றிருப்பார்கள். இந்த நாட்டில் மனித உரிமைகள் விடயத்தில் குறுகிய அரசியல் நலன்களே செல்வாக்கு செலுத்துகின்றன.

இங்கு குறிப்பிடவேண்டிய விடயம் என்னவென்றால் மனித உயிர்களிலும் இனரீதியான கண்ணோட்டம் இங்கு பச்சையாக நிலவுகிறது என்பதையே.

தனது ஆழ்புல, எல்லைக்குட்பட்ட தான் அரசாக இருக்கின்ற பகுதியில் உள்ள ஒரு பகுதி மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் என்ற குற்ற உணர்ச்சியைவிட இத்தாக்குதலில் சம்பந்தப்பட்ட படையினரை காப்பாற்றுவதே இங்கு முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக மாறியுள்ளது.

புதுக்குடியிருப்பு சம்பவமும், அம்பாறைச் சம்பவமும் அரச பயங்கரவாதத்தினாலும், உள்ளூர் பயங்கரவாதத்தினாலும் ஏறத்தாழ சமகாலத்தில் மேற்கொள்ளப்பட்டி

**எஸ்.திருநாவுக்கரசு**

ருந்தாலும் இரண்டு சம்பவங்களையும் பட்டவர்த்தனமான, காட்டுமிராண்டித்தனமான படுகொலைகள் என்பதை குறிப்பிடுவதை விடுத்து புதுக்குடியிருப்புச்சம்பவம்



ஏதோ தற்செயல் எனக்குறிப்பிடுவது பிரபல சிங்கள, ஆங்கிலப்பத்திரிகைகளின் நேர்மையீனத்தை சுட்டி நிற்கின்றது.

கோசோவோ அகதிகளை ஏற்றிச் சென்ற "ட்ரக்வண்டி" மீது நேட்டோ இராணுவம் தவறுதலாக குண்டு வீசியதாக உதாரணம் காட்டி அதுபோலத்தான் இதுவும் என்று "ஐலண்ட்" ஆசிரியர் தலையங்கம் எழுதுகிறது.

ஏரிக்கரைப் பத்திரிகைகளோ இராணுவ செய்தித்தொடர்பாளரின் அறிக்கையுடன் நிறுத்திக் கொண்டன.


அம்பாறை உகண, கோணகல பகுதிகளில் புலிகளால் 52 பொதுமக்கள் கண்ட துண்டமாக வெட்டி படுகொலை செய்யப்பட்ட சம்பவமானது நாட்டையே உலுக்கியது. 15 சிறுவர் சிறுமியரும், 14 பெண்களும், குழந்தைகளும் கர்ப்பிணிப்பெண்களும் அடக்கம்.

நிராயுதபாணியான சிங்கள மக்கள் மீது தாக்குதல் நடத்துவது 1985ல் அனுராதபுரம் போதிமரத்திற்கண்மையில் 84 சிங்கள மக்கள் படுகொலை செய்யப்பட்டதில் ஆரம்பித்தது.

அரசின் குண்டுவீச்சு தாக்குதல்களுக்குப்பதிலடியாக சாதாரண மக்கள் மீது தாக்குதல் தொடுப்பது ☞

தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் பிழையான சமிக்ஞையாகும்.

புதுக்குடியிருப்பு தாக்குதலுக்கு பதிலடியாகவே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தமிழ் பத்திரிகைகள் பலவும் தெரிவித்தன. இது உண்மையில் மிக மோசமான காட்டுமிராண்டித்தனமான ஒரு படுகொலையை மறைமுகமாக



நியாயப்படுத்தும் வேலையாகும்.

கொல்லப்பட்ட மக்கள் வறுமையில் உழலும் கீழ் மட்டத்து எல்லைக்கிராம மக்கள், ஒன்றும் அறியாத பாலகர்கள் இவர்களை வெட்டச்சொல்லி வழிகாட்டியவரிடம் கருணை, மனிதத்தன்மை, ஒரு சமூகத்தின் விடுதலையை எதிர்பார்க்க முடியாது.

இதில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்கள் மோசமான கொடூர காரியங்களுக்கெல்லாம் மூளைச் சலவை செய்யப்பட்டிருக்கிறார்கள்? இந்த மாதிரியான வழிகாட்டிகளும், இம்மாபாதகச் செயலில் நேரடியாக சம்பந்தப்பட்டவர்களும் தமிழ்ச் சமூகத்திற்கு ஆபத்தானவர்களே.

யுத்தம் புரிபவர்கள் தமது கையாலாகாத்தனத்தைச் சாதாரண மக்கள் மீது காண்பிப்பதைப் போன்ற கோழைத்தனம் வேறெதுவும் கிடையாது.

இதில் பெண்களும் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றார்கள் என்பது தான் மிகவும் கொடூரமானது. அன்பு, கருணை, வீரத்திற்கு அடையாளமாகக் கருதப்படும் பெண்கள் இங்கு கொலைகாரிகளாக மாற்றப்பட்டிருக்கிறார்கள் அவர்கள் கர்ப்பிணிப் பெண்களையும், குழந்தைகளையும் கொல்லுமளவிற்கு நிலைமைகள் சென்றுள்ளன.

ஏற்கனவே ராஜீவ் காந்தி படுகொலையிலும் வேறுபல தற்கொலைத் தாக்குதல்களிலும் மனித வெடிகுண்டுகளாகப் பெண்கள் பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

இந்த இரு சம்பவங்களும் இனங்களின் அழிவில் தமது அதிகார நலன்களைப் பாதுகாக்க முயலும் சக்திகளுக்கே சாதகமானவை. சிங்களப் பொதுமக்களின் படுகொலையையிட்டு புலிகளும் அப்பாவித் தமிழ் மக்கள் மீதான தாக்குதலையிட்டு சிங்கள வீரவிதான, பயங்கரவாத எதிர்ப்பு முன்னணி போன்ற அமைப்புக்கள் மாத்திரமே மகிழ்ச்சி கொள்ள முடியும். இத்தகைய சக்திகளின் அல்லது இவற்றுக்காதரவான சக்திகளின் வளர்ச்சி என்பது நாடு எவ்வளவு தூரம் நோய் கண்டுள்ளது என்பதனையே எடுத்துக்காட்டுகின்றது.

இன்று இனங்கள் மத்தியில் ஆழமான விரிசல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பத்திரிகைகளும், ஏனைய தகவல்துறை மீடியாக்களும் அதனை ஊக்கப்படுத்துகின்றன.

அம்பாறை சம்பவங்களை தலைப்புச்செய்தியாக வெளியிட்ட பத்திரிகைகள் படங்களை வெளியிட்ட ஆங்கில சிங்கள பத்திரிகைகள் புதுக்குடியிருப்பு சம்பவத்தையிட்டு வெளியிடவிரும்பாத அருவருப்பு அவர்களிடம் காணப்பட்டது. யுத்தத்தில் சம்பந்தப்படாத சாதரண மக்களுக்கு எதிரான தாக்குதல்கள் இந்த நாட்டில் மிக மோசமாக அதிகரித்து வருகின்றன. இதில் இனங்களுக்கிடையே ஐக்கியம் உருவாகுவதும் இங்கு தடுக்கப்படுகிறது.

★ அப்பாவி மக்களுக்கு உயிர்ச் சேதம் விளைவிப்பது.

★ மாறு பட்ட கொள்கைகள், அரசியல் நிலைப்பாடுகளை கொண்ட அரசியலாளர்களைக் கொல்வது.

★ மாறுபட்ட கருத்துக்கொண்டவர்களை மொத்தமாகவே துரோகிகளாக நாமம் சூட்டி படுகொலை செய்வது.

கடந்த 20வருட யுத்தத்தில் நேரடியாக சம்பந்தப்படாத 50 ஆயிரம் பேர்வரை கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

அரச படைகளால் கைது செய்யப்பட்டு காணாமல் போனவர்கள் ஒருபுறம் இருக்க அதற்கு அவசர காலச்சட்டமும், பயங்கரவாதத்தடைச்சட்டமும் உறுதுணையாக இருந்தன. என்பது வெளிப்படையான விடயம்.

இவற்றுக்கப்பால் பல நூற்றுக் கணக்கான மாற்று இயக்கங்கள் அரசியல் கட்சிகளின் அங்கத்தவர்கள், பல புத்திஜீவிகள், பல நூற்றுக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் புலிகளால் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்களால் கடத்திச் செல்லப்பட்ட பலருக்கு என்ன நடந்ததென்பதே தெரியாது. அவர்களுடைய புதைகுழிகள் எங்கிருக்கின்றன என்பது தெரியாது. அவர்கள் புதைக்கப்பட்டார்களா, எரிக்கப்பட்டார்களா என்பதும் தெரியாது.

இவற்றைப்பற்றி தமிழ் பத்திரிகைகள் மூச்சுக்கூட விடுவதில்லை.

அப்பாவி மக்கள் மீது கொலை வெறி தாக்குதல் புரியும் இருதரப்பினருக்கும் அழுத்தத்தை பிரயோகிக்கும் விதமாக சகல இன மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் மனிதாபிமானிகள், ஜனநாயகத்தில் அக்கறை கொண்டோர் தெருவில் இறங்கி போராடுவது அவசியமாகும்.

அதுமாத்திரமல்லாமல் அப்பாவி மக்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் கொலைகாரத்தனமான தாக்குதல் பற்றி விழிப்புணர்ச்சி ஊட்டும் சுவரொட்டிகளை மும்மொழிகளிலும் அச்சிட்டு நாட்டின் சகல பகுதிகளிலும் ஒட்டப்படவேண்டும். அதே போன்று துண்டுப்பிரசுரங்களும் வெளியிடப்படவேண்டும்.

இந்தப்படுகொலைகளுக்கெல்லாம் மூலகாரணமாயிருக்கும் இனப்பிரச்சினைக்கான தீர்வை துரிதப்படுத்த வலியுறுத்தியும், அதன் மூலம் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர கோரியும் நாம் போராட்டங்களை நடத்த வேண்டும்.

அதிகாரப்பரவலாக்கலைப் பற்றி அக்கறை செலுத்தாதவர்களும், காலங்கடத்துபவர்களும் இப்படுகொலைகளுக்கு உடந்தையானவர்களே.

எனவே இனச்சிறுபான்மை மக்களுக்கு அதிகாரப்பரவலாக்கலுக்காக இந்த நாட்டின் அரசு, பிரதான எதிர்க்கட்சி ஆகியவற்றை தொடர்ந்து வலியுறுத்துவதோடு அவற்றின் மீது சர்வதேச உள்ளூர் அழுத்தங்களும் பிரயோகிக்கப்படவேண்டும். ●

# ரணிலின் அறிக்கையின் பின்னால் இருக்கும் மர்மம் என்ன?

சந்திரிகாவின் அரசியல் தீர்வுத்திட்டத்துக்கு ஒத்துழைப்புத் தருவதற்கு கடந்த ஐந்து ஆண்டுகாலமாக மறுத்து வந்துள்ள ரணில்...

இலங்கையின் ஒற்றையாட்சி அமைப்பு முறையை மாற்ற முடியாது–மாற்றக்கூடாது; நிலத்தின் மீதும், நிதியின் மீதும் முழு அதிகாரமும் பாராளுமன்றத்திடம் மத்திய அரசிடமே இருக்க வேண்டும்; பொலிஸ் அமைப்பு மீதான முழுக் கட்டுப்பாடும் மத்திய அரசிடமே இருக்க வேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி பிடிவாதமாகவே இருந்து வருகின்றது. அதில் இன்னமும் எந்த மாற்றமுமில்லை.

இந்த விடயத்தில் சிங்கள பேரினவாதிகளின் நிலைப்பாட்டையே ஐக்கிய தேசியக் கட்சியும் கொண்டிருக்கிறது.

## லண்டன் சென்று வந்த ரணில்

அண்மையில் சில வாரங்களாக வெளிநாடுகளுக்கு உத்தியோக பூர்வமற்ற விஜயம் செய்து வந்த ரணில் லண்டனுக்கும் சென்று வந்தார். புலிகளின் பாலசிங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தத் தான் ரணில் சென்றுள்ளார் என்று அப்போதே வதந்திகள் வெளிப்பட்டன.

புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி விட்டுத்தான் வந்திருக்கிறார் என்றே இப்போது அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வன்னிக் காட்டிலிருந்து கடல்



மார்க்கமாக தாய்லாந்துக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து பாலசிங்கம் லண்டன் சென்றபோது அவர் நெல்சன் மண்டேலா போன்ற உலக அரசியற் தலைவர்களைச் சந்தித்து புலிகளுக்கு ஆதரவு தேடப்போகின்றார் என்று ஊகங்கள் தெரிவிக்கப்பட்டன.

ஆனால், இப்போது பார்த்தால், அடுத்த ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தலுக்கு முதல் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒரு தற்காலிக ரகசிய ஒப்பந்தத்தை ஏற்படுத்தவே பாலசிங்கம் அவசர அவசரமாக லண்டன் அனுப்பப்பட்டதாவே தெரிகிறது.

## புலிகளின் உடனடித்தேவை

யாழ்ப்பாணத்தையும் விட்டோடி, பின்னர் வன்னிப்பிரதேசத்திலும் 1500க்கு மேற்பட்ட சதுர கிலோ மீற்றர் பகுதிகளிலிருந்து புலிகள் விட்டோட வேண்டிய நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து–தமது பலவீனம் முழுமையாக வெளிப்படுவதற்கு முதலிலேயே ஒரு யுத்தநிறுத்தத்தை எப்பாடுபட்டாவது ஏற்படுத்த வேண்டுமென்பதே புலிகளுக்கு ஏற்பட்டுள்ள கட்டாயம்.

யாழ்ப்பாணத்திற்கான வீதிப் போக்குவரத்து திறக்கப்பட்டால் தமிழ் மக்கள் மீதான தமது பயங்கரவாத உளவியல் ரீதியான அடக்குமுறை அரசியற் கட்டுப்பாடு தளர்ந்து விடுமென்றே புலிகள் கருதுகின்றனர்.



இந்நிலைமைகளைக் கருத்திற் கொண்டே புலிகள் கடந்த ஆண்டு நவம்பர் தொடக்கம் தாங்கள் பேச்சுவார்த்தைக்கு தயார், யுத்த நிறுத்த ஏற்பாடுகளை செய்யத் தயார் என தொடர்ந்து அறிவித்து வருகின்றனர்.

அவர்கள் தமது யுத்தத்திற்கான தயாரிப்புக்காகவே இந்த பேச்சுவார்த்தையையும் யுத்தநிறுத்தத்தையும் கோருகிறார்கள் என்பது அனைவருக்கும் வெளிப்படையான உண்மையாகும்.

அரசியற் தீர்வு ரீதியாக சந்திரிகா அரசாங்கத்தின் அனுசரணையுடன் தேசிய சமாதானக் குழுவினர் இரண்டு தடவைகள் வன்னிக்கு சென்று புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தியும் அரசியற் தீர்வு தொடர்பாக புலிகளிடமிருந்து எந்த வித வாக்குறுதியையும் உடன்பாட்டையும் பெறமுடியவில்லை.

உள்நாட்டில் சமாதானத்தை விரும்புபவர்களோ! சர்வதேச ரீதியான நாடுகளின் பிரதிநிகளோ புலிகள் ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒரு சமாதான பூர்வமான அரசியற் தீர்வுக்கு ஒத்துவருபவர்கள் என்று நம்பத்தயாராக இல்லை.

ஓர் அரசியற் தீர்வுத்திட்ட ஏற்பாட்டை புலிகள் முன் வைப்பார்களேயானால் நிச்சயமாக இலங்கைத் தமிழர்களுக்கு ஓர் உறுதியான எதிர்காலம் உண்டு. புலிகளைப் பற்றிய சர்வதேச மற்றும் உள்நாட்டில் நிலவும் அபிப்பிராயத்திலும் பெரும் மாற்றம் ஏற்படும்.

இவ்விடயத்தில் தமிழ் மக்களின் நலனும் புலிகளின் தனிப்பட்ட நலனும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாக உள்ளன.

பிரபாகரனுக்கு இந்த விடயம் இதுவரை புரியாமல் இருக்கும் எனக் கூற முடியாது. ஆனால் பிரபாகரனைப் பொறுத்தவரையில் தன் நலமே முதலில், புலிகளின் நலன் இரண்டாவது, தனது நெருங்கிய ஆதரவாளர்களின் நலன் மூன்றாவது, தமிழ் மக்களின் நலன் என்பது கடைசியான விடயமே.

## புலியால் முடியாது

புலிகள் பிரிவினை தவிர்ந்த வேறெந்த வகையான அரசியற் தீர்வுத்திட்டத்தை முன் வைத்தாலும் அது புலிகளை அரசியல் ரீதியான நெருக்கடிக்குள் தள்ளி விடும் என்பதில் சந்தேகமில்லை.

எனினும் இராணுவத்திற்கும் தமக்குமிடையே பாரிய மோதல்களற்ற ஒரு சூழல் புலிகளுக்குக் கட்டாயமானதொரு தேவையாக உள்ளது. அதேவேளை தாம் எதனையும் விட்டுக்கொடுக்காமல் அரசாங்க நிர்வாகத்தின் மீதும் சட்டபூர்வமானதொரு இடைக்கால அதிகாரம் கிடைக்குமென்றால்

புருஷோத்தமன்

ஜனநாயகத்தை ஏற்று நிற்கும் தமிழ்க்கட்சிகளை மேலும் ஓரம் கட்டி விடலாம் என்றே புலிகள் கருதுகின்றனர்.

## ஐ.தே.கவின் பிரச்சனை

யு.என்.பிக்கு உள்ள அவசரத் தேவை இந்த ஆண்டு கடந்து மாசியிலும் பின்னர் வைகாசியிலும் நடைபெற்ற ஏழு மாகாணசபைத் தேர்தல்களிலும் ஐக்கிய தேசியக்கட்சி ஒரு சபையில் கூட பெரும்பான்மை இடங்களைப் பெற முடியவில்லை.

எனினும் இருமாகாணசபைகள் தவிர ஏனைய ஐந்து மாகாணங்களிலும் அரசாங்கக் கூட்டணிக்கு எதிராக வாக்குகளைப் பெற்றதிலும் சபை ஸ்தானங்களைப் பெற்றதிலும் நெருக்கமான நிலையைப்பெற்றுக்கொண்டதனால் ஐக்கிய தேசியக்கட்சிக்கு அடுத்த ஆண்டு வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத்தேர்தல் ஆகியவற்றில் வெற்றி பெறுவது தொடர்பாக ஒரு சிறிது நம்பிக்கையும் உண்டு.


கடந்த தேர்தலில் கொழும்பில் தமிழர்களின் வாக்குகள் ஐக்கிய தேசியக்கட்சிக்கு பெருந்தொகையாகக் கிடைத்ததாகவும் கணிப்பிடப்படுகின்றது. இதனால் தேர்தல்களின் போது தமிழர்களின் வாக்குகள் தொடர்பாக அக்கறை கொள்ளக்கூடிய தேவையும் நம்பிக்கையும் ஐ.தே.கவுக்கு உள்ளது.

தொண்டமானையோ, அஷ்ரப்பையோ நம்பும் நிலையில் ரணில் விக்கிரமசிங்க இல்லை. பாராளுமன்றத் தேர்தலக்குப் பின்னர் அரசாங்கத்தை அமைப்பதற்கான கூட்டில் நிலைமை ஐக்கிய தேசியக் கட்சிக்கு சாதகமானால் தொண்டமானும், அஷ்ரப்பும் ஐக்கிய தேசியக்கட்சியோடு சேரமாட்டார்கள் என்று உறுதியாகக் கூறமுடியாது.

தொடர்ச்சி 11ம் பக்கம் ☞

# “ஓ ஜூனியர், நீங்கள் மீண்டும் மீண்டும் தவறுகிறீர்கள்”

(நன்றி; 3.10.99 சண்டே ரைம்ஸ்)



## குமார் பொன்னம்பலத்துக்கு டீ.பீ.எஸ். ஜெயராஜ் பதில்

கடந்த ஞாயிறு கனடாவில் காலநிலை வெப்பமும் சூரிய வெளிச்சமுமாக இருந்தது. இனிவரும் மாதங்களில் இப்படியான காலநிலை இருக்காது என்பதால், இந்த சந்தர்ப்பத்தை ஒரு திறந்தவெளி விருந்துண்ணலுக்கு எனது நண்பர்கள் சிலரும் நானும் பயன்படுத்திக் கொண்டோம். அது ஒரு சந்தோசமான, நட்புறவு நிறைந்த நிகழ்ச்சியாக இருந்தது.

சிறிது நேரம் பிந்தி இந்த நிகழ்ச்சிக்கு வந்த நண்பனொருவன் இண்டர்நெட்டில் வந்த ஒரு செய்தியில் கொம்பியூட்டர் அச்சு மடலொன்றை கையில் பிடித்தவாறு “டி.பீ.எஸ். ஜெயராஜ்” என்று சத்தமிட்டுக் கொண்டுவந்தார்.

“உனக்கு ஒரு திறந்த மடல் எழுதப்பட்டுள்ளது. அது “சண்டே ரைம்ஸ்” பத்திரிகையில் வெளிவந்துள்ளது” என்று மேலும் கூறினார். எனது இதயத்துடிப்பு ஒரு கணம் நின்று பின் படபடவென்று அடித்தது. எனது தலைக்குள் இரத்த ஓட்டம் வேகமானது.

தேசிய செய்தித்தாள் ஒன்றில் எனக்கொரு திறந்த மடலா? இவ்வளவு காலமும் இத்தகைய மடல்கள் முக்கியமான புள்ளிகளுக்கு எழுதப்படுவது. இப்போது எனக்கு ஒரு திறந்த மடல். “விபரமாகச் சொல். யாரிடமிருந்து வந்துள்ளது” என்று நண்பனைக் கேட்டேன். “குமார்பொன்னம்பலம்” என்றார். எனது ஆவல், பரபரப்பு எல்லாம் பறந்தோடி ஒரு ஏமாற்றமே மிஞ்சியது.



அந்த திறந்த மடலின் நகல் எனது நண்பர்கள் ஒவ்வொருவரினதும் கைகளுக்கு மாறி அவரவர்களின் கவனத்தை ஈர்த்த பகுதிகள் சிரிப்பாகவும், நகைப்பாகவும் வெளிவந்தன.

அதில் முக்கியமானது என்னவென்றால் கனடாவில் நான் நண்பர்கள் இன்றி இருக்கிறேன் என்பது தான். அந்த மடல் பற்றி எங்கள் மத்தியில் ஒரு சிறு கலந்துரையாடல் உப்புச்சப்பில்லாத அந்த மடலுக்கு பதில் எழுதவேண்டியதில்லை என்பதே பலரின் கருத்தும். இருந்தும், சில அர்த்தமுள்ள, முக்கிய விடயங்களை எழுதலாம் என்பதும் சிலரது கருத்தாக இருந்தது.

சரி, கடிதத்தை எப்படி தொடங்குவது? அந்தக் காலத்தில் நான் அவரை (குமார் பொன்னம்பலத்தை) ‘அண்ணன்’ என்றும் ‘அண்ணே’ என்றும் அழைத்ததுண்டு. அது அந்தக் காலம்.

இப்போ “குமார்” என்றோ அல்லது பொன்னர் என்றோ அழைத்தால் அது அவருக்கு நெருக்கமானவன் என்று தப்பாக மற்றவர்கள் நினைக்க வைக்கும். வேண்டவே வேண்டாம்.

அவர் தனது மடலில் என்னை “டீ.பீ.எஸ். ஜெயராஜ் என்று குறிப்பிட்டுள்ளார். நானும் பதிலுக்கு அவரை ஜி.ஜி. பொன்னம்பலம் என்றோ அல்லது ஜி.ஜி. என்றோ அழைக்க முடியும். ஆனால் அப்படி அழைப்பது அவருடைய தந்தையை எனக்கு நினைவுபடுத்துவது போலாகும். அந்த மனிதரோடு எனக்கு எந்தவித பிரச்சனையும் இருந்ததில்லை.

தனது வாக்காளர்கள் தன்னை தனது தந்தையின் வாரிசு என்று கருதுவதில்லை என்பது குமாருக்கு ஒரு பெரிய குறையாக இருந்து வருகிறது.

இறுதியாக, தனது பெயருக்குப் பக்கத்தில் கட்டம் போட்டு எழுதும் ஜூனியர் என்ற சொல்லையே பாவிப்பது என்று முடிவெடுத்தேன்.

எனவே, ஜூனியர், நான் உங்களுடன் (நீலன் திருச்செல்வம்) பற்றி நீண்ட சொற்போரில் ஈடுபட விரும்பவில்லை என முதலிலேயே கூறிக்கொள்ள விரும்பவில்லை.

நீலன் சமுதாய அரங்கில் எவ்வாறு ஒரு பெரிய மனிதனாக. விளங்கினார் என்பதைப் பற்றி உங்களுடன் கலந்துரையாட நான் எப்போதும் தயரர் என்ற போதிலும், அது விடயமாக ஒரு நீண்ட கடிதத் தொடரில் உங்களுடன் ஈடுபட நான் விரும்பவில்லை.

ஒரு சிறந்த மனிதரை அவரது மரணத்தின் பின் கேவலப்படுத்த நினைக்கும் உங்கள் பரிதாப முயற்சிகளால் உங்களை நீங்களே உலகுக்கு எப்படிப் பட்டவர் என்பதை படம் பிடித்துக் காட்டியுள்ளீர்கள்.

பல லட்சம் முறை கங்கை நதியில் நீங்கள் மூழ்கி எழுந்தாலும் உங்கள் பாவம் கழுவப்படாது. நான் செய்ய விரும்புவதெல்லாம் உங்களின் பொய்புரட்டுக்கள் சிலவற்றை உலகுக்கு அம்பலப் படுத்தி, உங்களுக்கு ஒரு சவால் விடவே.

நீங்கள் எழுதியவற்றில் பெரும் பகுதி வெறும் நாடாக மேடைப் பேச்சே தவிர வேறில்லை. அவற்றில் சிலவற்றுக்கு மீள்விளக்கம் அளிக்கப்பட வேண்டியுள்ளது.

ஆனால், முதலில் நீலனுக்கும் உங்களுக்கும் இடையில் நீங்கள் உருவாக்க முயலும் புராணக் கதைகள் சிலவற்றை முறியடிக்க விரும்புகிறேன். நீலன் உயிரோடு இருந்தபோது ஏன் அவருக்காக நான் வாதாடவில்லை என்று கேட்டுள்ளீர்கள். நான் உட்பட தனது நண்பர்கள் எவரும் அவ்வாறு செய்வதை நீலன் ஒருபோதும் அனுமதித்திருக்கமாட்டார்.

உள்நாட்டு, வெளிநாட்டு செய்தி ஸ்தாபனங்களுடன் அவருக்கு பரந்துபட்ட தொடர்புகள் இருந்தபோதும், அவர் தன்னை முன்னிலைப் படுத்தவோ அல்லது தற்காத்துக் கொள்ளவோ முனைந்ததில்லை. கதையில் கூறப்பட்ட ‘கர்மயோகி’ யாகவே அவர் கடைசிவரை வாழ்ந்தார்.

ஒரு முறை அவரிடம் நீங்கள் அடிக்கடி அவரைச்சீண்டி எழுதுவதை ஏன் அவர் கண்டுகொள்வதில்லை என்று கேட்டேன். அதற்கு நீலன் கூறினார் “வைக்கோல் மனிதர்கள் பீற்றர் தத்துவத்துக்கு மேலே உயரமாட்டார்கள்.

தங்கள் தொல்லை தரும் பெறுமதியை நிலைநாட்ட அவர்கள் தொடர்ந்தும் பகைமை உணர்விலேயே உளன்று கொன்டிருப்பார்கள்”. இது எப்படி இருக்கிறது ஜூனியர்?

ஒன்றை மட்டும் தெளிவாகத் தெரிந்து கொள்ளுங்கள். நீலன் உயிருடன் இருந்த போதோ அல்லது இறந்த பின்போ அவருக்காக எவரும் வாதாட வேண்டி இருந்ததில்லை. அவர் அதற்கெல்லாம் அப்பாற்பட்டவர்.

உங்களின் தூற்றுதலோ என்னுடைய வாழ்த்துதலோ நீலனுடைய பெயரை நீண்ட காலப்போக்கில் எந்த விதத்திலும் பாதிக்காது. 1968 இல் மார்ட்டின்லூதர்கிங் இருந்த போது அவரைப் பற்றி சாதகமாகவும் பாதகமாகவும் அவரைப் பற்றி கட்டுரைகள் வெளிவந்தன.

ஆனால் அவைகள் எல்லாம் மக்கள் மனதில் நிலைத்து நிற்கின்றனவா? எது நிலைத்து நிற்கிறதென்றால் கிங் அவர்களுடைய நல்ல பெயரும் சாதனையும் தான்.

ஜூனியர், நீங்கள் நீலனை அவமானப்படுத்தும் முயற்சியில் அவரது தந்தையையும் விட்டு வைக்கவில்லை. துரையப்பா கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்ட பின் அவர்களுக்கு காலஞ்சென்ற மு. திருச்செல்வம் (நீலனின் தந்தை) ஒரு வரவேற்பு உபசாரம் நடாத்தினார் என்று குற்றம் சாட்டியுள்ளார்கள்.

இது முற்றுமுழுதாக தவறானது ஜூனியர். மு. திருச்செல்வம் 22.11.1976ல் காலமானார். துரையப்பா கொலைவழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஏழு பேர்களில் முதலில் விடுதலை செய்யப்பட்ட இருவர் செல்வரட்ணம் செல்வக்குமார் (7வது), தம்பிப்பிள்ளை சந்ததியார் (6வது)ஆகியோராவர். இவர்கள் 1977நடுப்பகுதியில் விடுவிக்கப்பட்டார்கள். இவ்வாறிருக்கும்போது, இவர்கள் அனைவரும் விடுவிக்கப்படும் முன்னரே இறந்து போன முருகேசு திருச்செல்வம் எவ்வாறு இவர்களுக்கு வரவேற்பு உபசாரம் அளித்திருக்க முடியும்.

துரையப்பாவின் மனைவி பரமேஸ்வரி உங்களது அப்பாவின் மருமகளாக இருந்தும் கூட துரையப்பா கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பாக வாதாடுவதற்கு உங்கள் தந்தை ஒப்புக் கொண்டார் என்பதும், இது உங்கள் குடும்ப வட்டாரத்தில் பெரும் புயலைக் கிளப்பியது என்பதும் உங்களுக்கு மறந்து போய் விட்டதா? உங்கள் தந்தை பெப்ரவரி 1977ல் இறந்து போனதால் அவர் வழக்கில் வாதாடும் நிலை ஏற்படவில்லை.

ஆனால், நீங்களும் இதே வழக்கில் வாதாட விரும்பியும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவரும் அதை விரும்பாததால் அது சாத்தியப்படாமல் போனது என்பதும் கூட உங்களுக்கு நினைவில் இல்லையா?ஆக, திருச்செல்வம் குடும்பத்தினர் அனைவரிடம் நீங்கள் ஓர் பகிரங்க மன்னிப்புக் கோர கடமைப்பட்டுள்ளீர்கள் என்று நீங்கள் கருதவில்லையா?.

துரையப்பா வழக்குத் தொடர்பான விடயங்கள் தெரிந்தவர்கள் பலர் இன்னும் உயிருடன் இருக்கிறார்கள் என்பதை மறந்து விடாதீர்கள்.

இருந்தாலும், இந்த விடயத்தில் உங்கள் நிலைப்பாடுதான் என்ன? ஒரு கதைக்காக, துரையப்பா கொலைவழக்கில் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டபோது மு. திருச்செல்வம் உயிருடன் இருந்தார் என்றும், விடுவிக்கப்பட்டவர்களுக்கு திருச்செல்வம் வரவேற்பு உபசாரம் நடத்தினார் என்றும் வைத்துக்கொள்வோம்.

அதில் என்ன தவறு? சட்டப்படி அது குற்றமா? குற்றம் சாட்டப்பட்ட ஒவ்வொருவரும் குற்றவாளியே என்பதுதான் உங்கள் வாதமா? அப்படியானால் நீங்கள் எதற்காக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பாக வாதாடுகிறீர்கள்?

உங்களது தற்போதைய தலைவர் பிரபாகரனும் துரையப்பா கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் என்பதை மறந்துவிடாதீர்கள். உங்களது விமர்சனங்களால் பிரபாகரன் கோபப்படக் கூடும், கவனம்.

நீலன் நாடாளுமன்றத்தில் தமிழர் பிரச்சனைகள் பற்றிப் பேசவில்லை என்பது உங்களது குற்றச் சாட்டுகளில் ஒன்று. ஓ ஜூனியர் நீங்கள் மீண்டும் மீண்டும் தவறுவிடுகிறீர்கள் 1983 பெப்ரவரி மாதம் நாடாளுமன்றத்தில் நீலன் தனது கன்னி உரையை ஆற்றும் போது நான் அங்கு இருந்தேன்.

தமிழ் பிரதேசங்கள் எவ்வாறு பொருளாதார ரீதியாக திட்டமிட்டுப் புறக்கணிக்கப்படுகின்றன. என்பதை நீலன் புள்ளி விபரங்களுடன் எடுத்துக் கூறினார். அவரது பேச்சு சிறிது சுவாரஸ்யம் அற்றதாகவே இருந்தது. காரணம், அவரது உரையில் மேடைப்பேச்சையோ அன்றி சில நாடாளுமன்ற உறுப்பினர்களைப் போன்று அர்த்தமற்ற உளறல்களையோ கேட்க முடியவில்லை. அவர் தான் நீலன். கலரியில் அமர்ந்திருப்பவர்களை திருப்திப்படுத்த பேசாதவர்.

அவர் 1994ல் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டபோது நான் கனடாவில் இருந்தேன். அதன்பின் அவரது நாடாளுமன்ற உரைகளை நேரடியாக கேட்க முடியாத போதிலும், அவை பற்றி உள்ளூர், வெளிநாட்டுப் பத்திரிகைகளில் குறிப்பிட்டிருந்ததை படித்துள்ளேன்.

நாடாளுமன்ற ஹான்சாட் வெளியீடுகளை நான் கப்பல் தபால் மூலம் தருவித்து நீலனுடைய பல உரைகளைக் குறிப்பாக அவசர காலச் சட்ட விவாதத்தின் போது அவரது காத்திரமான பங்களிப்புகளை படித்து அறிந்துள்ளேன்.

உண்மையில், தமிழ் காங்கிரஸ் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையை விட அதிக தடவைகள் நீலன் நாடாளுமன்றத்தில் உரையாற்றி இருப்பார் என்று நினைக்கிறேன்.

நீலன் நாடாளுமன்ற இருக்கை மீது பதவி ஆசை கொண்டவர் என்பது உங்களது வாதங்களில் ஒன்று. நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை குறிப்பாக நாடாளுமன்றத்துக்கு போட்டி போட விரும்பாமல் கிடைத்த சந்தர்ப்பங்களையும் உதறித் தள்ளிய மிகச் சிலருள் நீலனும் ஒருவர் என்பதை நீங்கள் ஏன் மறந்து விட்டீர்கள்?.

1990யூன் மாதம் திரு.யோகசங்கரி அவர்கள் சென்னையில் படுகொலை செய்யப்பட்ட பின் அவரது நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்தை தமிழர் விடுதலைக் கூட்டணி பட்டியலில் இருந்து ஒருவரால் நிரப்பப்பட வேண்டி இருந்தது.

அந்தவேளை யோகேஸ்வரனும் உயிருடன் இல்லை. சிவசிதம்பரம் அவர்களும் பதவி ஏற்க மறுத்துவிட்டார். பட்டியலில் அடுத்ததாக இருந்த நீலன் த.வி.கூட்டணி செயலாளராகவும் இருந்தார். அவர் செய்ய வேண்டியதெல்லாம் தன்னைத்தானே நாடாளுமன்ற உறுப்பினராக நியமிப்பது மட்டுமே.

ஆனால், ஈ.பி.ஆர்.எல்.எஃப் ஐச் சேர்ந்த அபுயூசுப் தான் அந்த வெற்றிடத்தை பெறுவதற்காக நீலன் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டாம் என்று கோரியபோது நீலன் பெருந்தன்மையோடு சம்மதித்தார்.

இது ஏனென்றால் வடக்கில் இருந்து துரத்தப்பட்ட முஸ்லிம்களுக்கு ஒரு பிரதிநிதித்துவம் வேண்டும் என்று நீலன் அப்போது கருதினார். ஆனால் பட்டியலில் அடுத்ததாக இருந்த ENDLF உறுப்பினர் சிறீனிவாசன் என்பவர் நீலனைப்போல் பெருந்தன்மையோடு நடந்து கொள்ளவில்லை.

லண்டனில் இருந்த சிறீனிவாசன் கொழும்புக்கு ஓடோடி வந்து அந்த நாடாளுமன்ற வெற்றிடத்தை நிரப்பிக் கொண்டார். அதனால் அபுயூசுப் வாய்ப்பை இழந்தார்.

நீலன் சத்தியப்பிரமாணம் எடுக்காமல் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்காலம் காலாவதியாக விட்டது வீணாகிப்போனது.

தமிழ் மக்களில் கணிசமான பகுதியினருக்கு நீங்கள் தான் பிரதிநிதி என்பது போல நீங்கள் தம்பட்டம் அடித்து திரிவதன் உண்மை பற்றி இப்போ பார்ப்போம். தமிழ் மக்களிடையே உங்களுக்கு நிரம்பிய ஆதரவு உண்டு என்பது போலவும், அதனால் தமிழ் மக்கள் சார்பாக பேசும் உரிமை உங்களுக்கு உண்டு என்பது போலவும் ஒரு அபிப்பிராயத்தை நீங்களே உருவாக்க முயல்கிறீர்கள்.

இதன் உண்மையையும் நாம் ஆராய்வோம். இதுவரை காலமும் ஒரேயொரு தடவை மட்டும் நீலனும் நீங்களும் ஒரே காலத்தில் நின்று போட்டியிட்டு உள்ளீர்கள். இது 1989 பெப்ரவரி 15ல் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் ஆகும். அப்போது நீலன் யாழ்ப்பாணத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பிலும், நீங்கள் தமிழ் காங்கிரஸ் சார்பிலும் போட்டியிட்டீர்கள்.

உங்களது கட்சிப் பட்டியலில் நீங்கள் முதலிடம் வகித்தீர்கள். அதனால் உங்கள் கட்சிக்கு விழக்கூடிய அத்தனை வாக்குகளுக்கும் முன்னுரிமை பெறக்கூடிய நிலையில் நீங்கள் இருந்தீர்கள்.

இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்

### மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்

# மேற்குலக நாடுகள் ஆர்வம் இந்தியா மௌனம்.

'கழுதைக்கு தெரியுமா கற்பூர வாசனை' 'கேடு வரும் பின்னே-மதி கெட்டு வரும் முன்னே' இவைகள் பழமொழிகள் மட்டுமல்ல தமிழர்களுக்காக எழுதப்பட்ட புதுமொழிகள் என்றும் சொல்லலாம். ஏற வேண்டிய பஸ்சில் ஏறாமல்-ஏறியவர்களையும் இழுத்து வீழ்த்தியவர்கள் சிங்களவர்கள் அல்ல! தமிழர்கள் தான்.

கோடரிக் காம்பாக இருந்தவர்களும் தமிழர்கள்தான். தம்பி உண்டான் படைக்கு அஞ்சான். ஆனால் இங்கு அஞ்சி ஒடுங்குவது தம்பிக்குத்தான். அன்று இந்தியாவின் மத்தியஸ்தத்தை துச்சமென அவமதித்து நிராகரித்தவர்களும் இவர்கள்தான். இந்திய இராணுவமே வெளியேறு என்று கூச்சலிட்டவர்களும் இவர்கள்தான்.

இன்று மூன்றாம்தரப்பு மத்தியஸ்தம் வேண்டுமென்று புலிகளின் ஆதரவாளர்கள் தமிழ் பத்திரிகையாளர்கள்-தமிழ்க்கட்சித் தலைவர்கள்-புத்துஜீவிகள் மதகுருமார்கள், ஏன் புலிகள் கூட வாயிலும் வயிற்றிலும்-அடித்து ஒப்பாரி வைக்கிறார்கள்.

இந்தப் புத்தி அன்றிருந்தால் எவ்வளவு உயிர்கள் காப்பற்றப்பட்டிருக்கும். எவ்வளவு சொத்துக்கள் பாதுகாக்கப்பட்டிருக்கும். இந்த மத்தியஸ்தத்தைதான் அன்று இந்தியா செய்து கொடுக்க முன்வந்தது. விட்டார்களா இந்த புண்ணியவான்கள். வேரறுத்து விட்டார்கள். தமிழ் மக்களின் நிம்மதியான வாழ்க்கையை குழி தோண்டிப் புதைத்து விட்டார்கள்.

1987ம் ஆண்டின் நடுப்பகுதியில் இலங்கை இராணுவம் யாழ் நகரை முற்றுகையிட்டு-கைப்பற்ற முயன்ற போது இந்திய அரசு தலையிட்டு-தடுத்து நிறுத்தியிருக்காவிட்டால்-ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருப்பார்கள்.

இந்தியா என்ற ஒரு பெரிய நாடு மூன்றாம் தரப்பாக முன்வந்து தலையிட்டது அன்று தமிழ் மக்களுக்கு ஒரு பலமாக இருந்தது. வேறு வழியின்றி இலங்கை ஒரு ஒப்பந்தத்தற்கு வரவேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டது. அதன் விளைவாகவே இந்திய-இலங்கை ஒப்பந்தம் உருவானது.

விடுதைலப்புலிகள் இந்திய இராணுவத்துடன் வலியச் சண்டைக்கு போகும் வரை ஒட்டு மொத்த தமிழர்களும்-இந்திய அரசின் தலையீட்டையும்-இந்திய இராணுவத்தையும் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்றார்கள் என்பதே உண்மை.

தமிழ் மக்களின் இந்த மகிழ்ச்சியையும்-எழுச்சியையும் பொறுக்க முடியாதவர்கள் இந்திய இராணுவத்தினருடன் போர் தொடுத்தனர். முடிவு-இன்றுவரை யுத்த சகதிக்குள் சிக்கித் தவிக்கன்றனர்.

கைது-காணாமல்போதல்-மரணம்-இடம்பெயர்வு-உணவுத் தட்டுப்பாடு-நோய் இவைகள்தான் இன்று மக்களுக்கு மிஞ்சி இருக்கின்றது.

**அலெக்சாண்டர்**

இந்திய இராணுவம்-புலிகள் மோதல்களின் போது தமிழ் மக்கள் உயிரிழந்தது என்னவோ உண்மைதான். அது இருதரப்புக்கும் இடையில் யுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட உயிர் இழப்புக்கள். ஒப்பிட்டளவில் இலங்கை இராணுமும்-புலிகளும்தான் தமிழ் மக்களை அதிகமாக கொன்று குவித்திருக்கிறார்கள். இன்று மனித உயிர்களைப் பலிகொள்வதில் உலகின் முதலிடத்தில் இருப்பவர்களும் இவர்கள் தான். இதை வேறு யாரும் சொல்லவில்லை-சர்வேதச மன்னிப்புச்சபையே தனது வருடாந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கிறது.

கடந்த காலத்தில் நடந்து முடிந்த சம்பவங்கள் வரலாறாகிறது. அது திரிவுபட்டு பிழையான செய்திகளாக எதிர்காலத்தில் மாறக் கூடாது.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்ட போது சிங்களஅரசும்-சிங்கள மக்களும் முழுமனதுடன் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தியாவின் நிர்ப்பந்தம் காரணமாகவே அது ஏற்றுக் கொள்ளும் நிலைக்கு கொண்டுவரப்பட்டது. தமிழ் மக்களுக்காக-அவர்களது போராட்டத்திற்கு பக்க பலமாக அன்று இருந்தது இந்தியாதான். இதன் நிமித்தம் இலங்கை அரசையே பகைத்துக்கொள்ள இந்திய அரசு சித்தமாயிருந்தது-என்பதும் மறக்க முடியாத உண்மை.

இந்த அளவுக்கு இந்தியாவின் பங்களிப்பும்-ஈடுபாடும் இருந்த போது அதைப் பயன்படுத்தத் தெரியாமல்-நண்பனையே விரோதியாக நினைத்து போர்-தொடுத்தவர்கள்தான் இந்த விடுதலைப்புலிகள். இதைப் பார்த்து, வந்த வேலையை இப்போதுதான் இந்தியர்கள் சரியாக செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள் என்று சிங்கள அரசும்-சிங்கள மக்களும் பூரிப்படைந்தனர்.

இந்திய இராணுவத்தையும்-விடுதலைப்புலிகளையும் மோத வைத்ததில்-பெரும்பங்காற்றியவர் என்று ஜே.ஆர்.ஜயவர்தனாவுக்கு சிங்கள மக்களால் புகழாரம் சூட்டப்பட்டது. தமிழர்களைப் பாதுகாக்க வந்தவா்களுடன் தமிழர்களே சண்டையிடுகிறார்கள் என்னும் கேவலமான நிலைக்கு தமிழர் போராட்டம் திசைமாறி திருப்பப்பட்டது.

இந்த இக்கட்டான நிலையில் தான் தோழர் பத்மநாபாவும், அவர்து தோழர்களும் கொஞ்சம் புத்திசாலித்தனமாக சிந்தித்தனர். தமிழர் தரப்பில் எல்லோரும் கைவிட்ட நிலையில் அந்த இளம் தலைவர் பத்மநாபா துணிந்து-உறுதியுடன் இந்திய-அரசுக்கும் தமிழ் மக்களுக்கும் ஒரு பாலமாக வந்து கைகொடுத்தார்.

அதன் வெற்றிதான்-திருகோணமலை தமிழர்களுடைய தலைநகரமானது. தமிழ் மக்களின் பாரம்பரிய பூமியான வட-கிழக்குக்கு ஒரு தமிழ் பேசும் மாகாண அரசு உதயமானது.

இன்று சிங்கள ஆட்சியாளர்களால் அதன் செயல்பாடுகள் முடக்கிவைக்கப்பட்டிருந்தாலும், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தால் உருவான வட-கிழக்கு மாகாணசபையை இல்லாதொழிக்க முடியவில்லை.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் கொஞ்சம் யோசித்திருந்தால்-இந்தியாவின் நல்லெண்ணத்தை புரிந்திருந்தால் இவ்வளவு சீரழிவுகளும் வந்திருக்காது. தன்னால்தான் எல்லாம் ஆகவேண்டும் என்ற அவருடைய சிறுபிள்ளைத்தனமான நினைப்பால் ஒட்டுமொத்த தமிழ் மக்களுடைய நலன்களும் இன்று வரை ஒரு கேள்விக்குறியாகவே தொடர்கின்றது.

விடுதலைப்புலிகள்-இலங்கை அரசின் நெருக்கடிளாலும்-இந்தியாவில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தாலும் 1989ம் ஆண்டு இறுதியில் இந்திய அரசு தனது இராணுவத்தை விலக்கிக்கொண்டது. இந்தியாவின் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்தையும். இந்தியாவின் இராஜதந்திரத்தையும் இந்திய இராணுவத்தின் உயிர்த்தியாகத்தையும் இலங்கை அரசு அலட்சியப்படுத்தியது ஒருகசப்பான வரலாறு.



இவற்றிற்கப்பால் முக்கிய காரணகர்த்தா அந்த நேரத்தில் ஜனாதிபதியாக ஆட்சியில் இருந்த பிரேமதாசாவாகும். இரு நாடுகளுக்கு இடையில் உருவான இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அவர் மதித்து நடக்கவில்லை. அதற்கு மாறாக சீர்குலைப்பு நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டார்.

புலிகளுக்கு ஆயுதமும் பணமும் கொடுத்து இந்திய இராணுவத்திற்கு எதிராக யுத்தம் செய்யும்படி தூண்டினார். இறுதியில் எல்லாம் அவர் விருப்பப்படி நடந்து முடிந்ததும்-புலிகள் தங்கள் விருப்பப்படி பிரேமதாசாவை கொன்றொழித்தார்கள். எதிரிக்கு எதிரி நண்பன் என நினைத்தவர் ஏமாந்தே போனார். அவர் தனது உயிரை இழந்ததுதான் மிச்சம்.

ஐக்கிய நாடுகள் சபையின் மத்தியஸ்தம் தேவையில்லை என்ற கதிர்காமரின் கூற்று மேற்குலக இராஜதந்திரிகளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

கதிர்காமர் இலங்கையை வல்லரசாக நினைக்கிறார் போலும். இருப்பினும் காலப்போக்கில் மத்தியஸ்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமையே வரும். ஏனென்றால் உலகில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் மாற்றங்களால் இலங்கை அரசின் போக்கிலும் மாற்றங்கள் ஏற்படலாம்.

விடுதலைப்புலிகள்-இலங்கை அரசு பேச்சுவார்த்தையில் மத்தியஸ்தம் பேச வருபவர்கள்-முதலில் யாருடன் பேசப் போகிறோம் என்பதை தெரிந்து கொள்வது நல்லது. பிரச்சனைக்குரிய இரு சாராரும் நேர்மையற்றவர்கள்.

பேச்சுவார்த்தையை போர் உபாயத்திற்காக பயன்படுத்துபவர்கள். அற்ப காரணங்களுக்காக முன்பு நடைபெற்ற பேர்ச்சுவார்த்தைகளை-ஒப்பந்தங்களை மீறியவர்கள். முறியடித்தவர்கள். அதிலும், இலங்கை அரசு ஒப்பந்தங்களை மீறுவதிலும் கிளித்தெறிவதிலும் சூரர்கள். அதற்கு வரலாறும் உண்டு.

பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம், கச்சதீவு ஒப்பந்தம், இந்திய-இலங்கை ஒப்பந்தம் போன்றவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லாம். இந்த ஒப்பந்தங்கள் ஒன்றில் கிழித்துப் போடப்பட்டிருக்கும். அல்லது கனம்பண்ணாமல் அலட்சியப்படுத்தப்பட்டிருக்கும்.

இந்தியாவான இந்தியாவுக்கே தண்ணி காட்டிய இவர்கள் மேற்குலக இராஜதந்திரிகளுக்கு என்ன பாடத்தை கொடுக்கப் போகிறார்களோ தெரியாது. தெருச் சண்டையை நிறுத்துவதற்கே மூன்றாம் ஆள் தேவைப்படும் போது-ஒரு நாட்டின் இரு இனங்களுக்கிடையிலான நீண்டகால போரை நிறுத்துவதற்கு மூன்றாம் தரப்பு மத்தயஸ்தம் அவசியமாகிறது. இதை கதிர்காமரும், அரசும் புரிந்து கொண்டால் சரி.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஐ.நா சபையோ-மேற்குலக நாடுகளோ மத்தியஸ்தத்தில் இறங்குவதாக இருந்தால் அதில் இந்தியாவும் ஒரு பங்குதாரராக இருக்கவேண்டும். அல்லது குறைந்த பட்சம் இந்தியாவின் அனுசரணையுடன் இப் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும். ●

> **இந்திய இராணுவத்தையும்-விடுதலைப்புலிகளையும் மோதவைத்ததில்-பெரும்பங்காற்றியவர் என்று ஜெ.ஆர். ஜயவர்தனாவுக்கு சிங்கள மக்களால் புகழாரம் சூட்டப்பட்டது. தமிழர்களைப் பாதுகாக்க வந்தவர்களுடன் தமிழர்களே சண்டையிடுகிறார்கள் என்னும் கேவலமான நிலைக்கு தமிழர் போராட்டம் திசைமாறி திருப்பப்பட்டது. இந்த இக்கட்டான நிலையில் தான் தோழர் பத்மநாபாவும், அவரது தோழர்களும் கொஞ்சம் புத்திசாலித்தனமாக சிந்தித்தனர். தமிழர் தரப்பில் எல்லோரும் கைவிட்ட நிலையில் அந்த இளம் தலைவர் பத்மநாபா துணிந்து-உறுதியுடன் இந்திய-அரசுக்கும் தமிழ் மக்களுக்கும் ஒரு பாலமாக வந்து கைகொடுத்தார். அதன் வெற்றிதான்-திருகோணமலை தமிழர்களுடைய தலை நகரமானது. தமிழ் மக்களின் பாரம்பரிய பூமியான வட-கிழக்குக்கு ஒரு தமிழ் பேசும் மாகாண அரசு உதயமானது. இன்று சிங்கள ஆட்சியாளர்களால் அதன் செயல்பாடுகள் முடக்கிவைக்கப்பட்டிருந்தாலும், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தால் உருவான வட-கிழக்கு மாகாணசபையை இல்லாதொழிக்க முடியவில்லை.**

## போரின் சிறகுகள்

நேற்று
நாம் நடந்த பாதையெங்கும்!
நெருஞ்சிமுள்ளை
விதைத்தவரே!

தேசமெங்கும்
ஆயுத விருட்சத்தை
நட்டவரே...... நட்டவரே!

உங்கள் வாழ்க்கை
கனவில் கரையுது......
நிலவில் நனைந்து
பனிக்கன்னின் நீராகும்......

மரணித்த இளசுகளின்
மண்டையோட்டிலும்
துப்பாக்கியின் தடங்கள்
துளை போட்டு காத்திருக்கும்!

ஓ!
முடியாது... இனியும்முடியாது..
சோர்விழந்த சமூகத்தை
மரணத்தால் நிரப்பமுடியாது...

இல்லையெனில்
அழிவின் எல்லையில்
கைகோர்த்து காத்திருப்போம்!

# சொலமன் பதில்கள்

**மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை கதிர்காமர் எதிர்ப்பதற்கு காரணம் என்ன?**

*ம. சின்னத்தம்பி, திருகோணமலை.*

அரசியல் ஞானசூனியம். இது உள்நாட்டுப் பிரச்சனையாம். நாட்டின் இறைமைக்கு பங்கமேற்பட்டிடுமாம். அதனால் அது தேவையில்லையாம். இது உள்நாட்டுப் பிரச்சனை என்றால் 1987 ஜீலையில் இந்திய இலங்கை ஒப்பந்தம் ஏன் ஏற்பட்டதாம், 1,20,000 இந்திய இராணுவம் எதற்காக வந்தது. இதனை தற்போதைய ஜனாதிபதியும் அவரது கட்சியும் அப்போது ஆதரித்தன. இவற்றைப் பற்றி கதிர்காமருக்கு தெரியாமல் இருந்திருக்கலாம். ஆனால் வெளிநாட்டு அமைச்சர் அண்மைக்கால வரலாற்றையாவது படித்துக் கொள்வது நல்லது.

**எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு ஜனாதிபதி 8பக்க கடிதமெழுதியுள்ளாரே என்ன விஷேசம்?**

*எல். கணேஷ்குமார், அம்பாறை.*

தேர்தலில் வாக்குகளை தக்க வைத்துக் கொள்ள ஓர் புதிய முயற்சி. எதிர்க்கட்சி இனப்பிரச்சனை தீர்க்க தன்னுடன் ஒத்துழைக்கவில்லை என்பதால் கடிதத்தினூடு ரணிலை அம்பலப்படுத்துகிறாராம். இதற்கு மறுத்தானாக அவரும் ஒரு விதத்தில் பதில் சொல்வாராம். இவையாவும் தீர்வு தொடர்பாக இவர்களது அக்கறையின்மையையே காட்டுகின்றது. யுத்தத்தினூடு மில்லியன்களாக டொலர்கள் புரளும் போது தீர்வு எதற்கு? சமாதானம் எதற்கு?

**மீண்டும் வாஜ்பாய் இந்தியப் பிரதமராகியுள்ளாரே?**

*வ. மயில்வாகனம், நல்லூர்.*

திறமையான நிர்வாகி, திறமையான ராஜதந்திரி என்று பெயரெடுத்தவர். இந்தியாவின் பெரும்பான்மை மக்களால் விரும்பப்படும் ஒரு தலைவர். அமெரிக்கா போன்ற வல்லரசுகளுக்கும் பயப்படாமல், தான் நினைத்ததை சாதிப்பதில் சமர்த்தர். இந்தியாவை அணு வல்லரசாக மாற்றியவர். அவரின் செல்வாக்கும் பிரபல்யமுமே இன்று அறுதிப் பெரும்பான்மை கொண்ட ஸ்திரமான அரசை அமைக்க உதவியாக இருந்தது. ஊழலற்ற ஆட்சியொன்றை விரும்பும் வாஜ்பாய் அவர்கள், வலுவான, வளமான பாரத்திற்கு அடித்தளமிடுவார் என்பதில் ஐயமில்லை.

**தம்மைத் தவிர்ந்த ஏனைய இயக்கங்கள் தமது அலுவலகங்களை மூடிவிட வேண்டுமென புலிகள் கூறியுள்ளது பற்றி....**

*க. நந்தகுமார், வவுனியா.*

1986இல் ஏனைய இயக்கங்களை தடை செய்யத் தொடங்கியவர்கள். இன்று 13வருடங்களாக அதனையே தொடர்ந்து செய்து வருகின்றனர். நூற்றுக்கணக்கான இயக்கப் போராளிகளைக் கொன்றார்கள். பல்வேறுபட்ட கட்சிகளின் இயக்கங்களின் தலைவர்களைக் கொலை செய்தார்கள். அரசியல் ரீதியாக அல்லது இராணுவரீதியாக அவர்கள் பலவீனமாகிப் போனாலும், ஏனைய இயக்கங்களை அழித்தொழிப்பார்கள். ஏனைய இயக்கங்கள் அரசியல் ரீதியில் பலமானாலும் அழித்தொழிப்பார்கள். மொத்தத்தில் அவர்கள் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதியாக இருக்க வேண்டுமெனில் தமிழ் கட்சிக்களை அழித்தொழிப்பதைத் தவிர அவர்களுக்கு வேறு மார்க்கமில்லை.

**ராமதாஸ், வை.கோ, ஜோர்ஜ்பெர்ணாண்டஸ் போன்றவர்களின் வெற்றி தென்னிலங்கைப் புத்தி ஜீவிகளை கிலி கொள்ளவைக்கிறது?**

*ப. பார்த்தீபன், சுன்னாகம்.*

இந்திய அரசியலைக் குறிப்பாக தமிழக அரசியலை முழுமையாக விளங்கிக் கொள்ளாத அரை வேக்காட்டுத்தனமானவர்களின் தேவையற்ற கிலிதான் இது. ராமதாசும், வை.கோவும், ஈழத்தமிழர் பிரச்சனை தொடர்பாக தமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் குறிப்பிட்டதுடன் அவர்களின் பணி முடிந்து விட்டது. தனி நாடோ, ஈழத்தை விடுங்கள், வாஜ்பாய் அரசு, ஈழத் தமிழர் பிரச்சனையில் தலையிட்டு ஓர் கௌரவமான தீர்வை உருவாக்கும் வகையில் இவர்கள் செயற்படுவார்களேயாயின் அதுவே பெரிய விடயமாகும். ஆனால் டெல்கியின் நிலைப்பாட்டை அவ்வளவு சுலபமாக இவர்களால் மாற்ற முடியாது. பாரதீய ஜனதாக் கட்சியானாலும் சரி, அவர்களின் கூட்டாக உள்ள R.S.S ஆனாலும் சரி இலங்கையில் தனி நாடொன்றை முற்றுமுழுதாக எதிர்க்கிறார்கள். இவற்றை விளங்கிக் கொள்ளாத தென்னலங்கைப் புத்திஜீவிகளின் கிலி அநாவசியமானது. உப்புசப்பற்றது.

**தேசிய அரசு அமைப்பதன் மூலம் இனப்பிரச்சனையத் தீர்க்க தயார் என்று எதிர்க்கட்சித்தலைவர் புதுக்கதை அளந்திருக்கிறாரே?**

*அ. இராமச்சந்திரன், மன்னார்.*

இதுவும் ஒரு தேர்தல் நாடகம் தான். அவரது கட்சியின் தேசியப்பட்டியல் எம்.பி யான க. சுப்பிரமணியம் அவர்கள் முயன்றபோதே அதனை மறுதலித்தவர், தான் ஆட்சிக்கு வந்தால் தேசிய அரசை உருவாக்குவதென்பதெல்லாம் சுத்தப் பிதற்றலைத் தவிர வேறில்லை.

**திருகோணமலையைச் சமாதான நகரமாக யுனெஸ்கோ தேர்ந்தெடுத்ததற்கு ஏதாவது அரசியல் பின்னணி இருக்கிறதா?**

*ந. ரவிவர்மன், திருகோணமலை.*

யுனெஸ்கோ தானாக இந்த நகரத்தை தேர்ந்தெடுக்கவில்லை. இலங்கை தான் இந்நகரத்தை சமாதான நகரமாக பரிந்துரை செய்தது. ஐ.நா பணத்துடன் சிங்களவர்களைக் குடியேற்றவும், தமிழரை அங்கு சிறுபான்மையாக்கவும் வசதியாக இருக்கும். சோழியன் குடுமி சும்மா ஆடாது.

**மனித உரிமைகளைப் பேணுவதில் ஐ.தே.க அரசை விட இன்றைய அரசு அக்கறையுடன் இருப்பதாக ஒரு கருத்து நிலவுகின்றது. இதில் ஏதாவது உண்மை இருக்கின்றதா?**

*ந. கமலமலர், மட்டக்களப்பு.*

ஐ.தே.க. காலத்தில் ஜே.வி.பியின் வன்முறைத் தாக்குதல்கள் நடந்தன. இதனை அடக்குகின்றோம் என்ற பெயரில் ஆயிரக்கணக்கான அப்பாவி சிங்கள இளைஞர்கள் ரயர் போட்டு எரிக்கப்பட்டார்கள். றோகண விஜயவீராவின் கொலையுடன் குறைய ஆரம்பித்தது. சந்திரிகா அவர்கள் வந்ததும், பல்வேறு விசாரணைக் கமிஷன்கள் வைத்து நஷ்டஈடும் பலருக்கு வழங்கப்பட்டது. ஆனால் ஐ.தே.க. காலத்திலும் சரி, இன்றைய ஜனாதிபதியின் காலத்திலும் சரி தமிழருக்கு எதிரான மனித உரிமை மீறல்களில் எவ்வித மாற்றமுமில்லை. செம்மணிப் படுகொலைகள், கொழும்பில் வாவியில் மிதந்த தமிழர் சடலங்கள், சுற்றிவளைப்புக்கள், கைதுகள் யாவும் மிகத் தாராளமாகவே நடக்கின்றன. இன்று கைதுகளுக்கு ரசீது கொடுப்பதகக் கேள்வி. கொலைகளுக்கு அதுவுமில்லை.

**புலிகள் பேச்சுவார்த்தை, திம்பு பிரகடனம் என்று அறிவிக்க குமார் பொன்னம்பலம், எதுவும் சரிவராது தமிழீழம் என்றும் கூறுகிறாரே?**

*ம. மர்சூக், வெள்ளவத்தை.*

குமார் பாவம் 1985இல் பிரகடனத்தின் போது என்ன செய்தாரோ? அன்று, சிறீமாவுடனும், பின்னர் கூட்டணியின் ஒத்தாசையுடனும், யாழிலும், கொழும்பிலும் தேர்தலில் நின்று தோற்றவருக்கு, புலிகளின் பெயரைச் சொல்லியாவது ஒரு முறை பாராளுமன்ற உறுப்பினராக முடியாதா என்ற அவா? இன்று தமக்காகப் பேச கொழும்பில் புலிகளுக்கு ஒருவர் வேண்டும். அது குமாராயிருந்தாலென்ன, யாராயிருந்தாலென்ன? தேவை முடிய குமார் மீண்டும் நடுத்தெருவில் தான். எல்லாரும் தனிநாட்டை விட்டு மாநில சுயாட்சி, சமஷ்டி என்று பேச குமார் தனிநாட்டில் நிற்கின்றார். வாழ்க குமாரின் வீரம் வாழ்க அவரின் தேசிய இனப்பற்று.

**நீலனின் கொலையை பற்றி என்ன கருதுகின்றீர்கள்?**

*சோ. அன்பழகன், மூதூர்.*

மிகவும் கோழைத்தனமான செயல். தமிழ் மக்களுக்கு கிடைத்த அறிவாளியில் ஒருவர், சர்வதேச ரீதியாக தமிழரின் பிரச்சனையைக் கொண்டு சென்றவர்களில் ஒருவர். யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை உருவாக்கலாம் என்ற நம்பிக்கையில் செயற்பட்டவர். புலிகளும், அவர்களது ஆதரவாளர்களும் அவரைத் துரோகியென பிரச்சாரம் செய்தார்கள். இன்றும் செய்கின்றார்கள். ஆனால் அவரைப் போன்ற அறிவாளியைப் தமிழ் சமூகம் பெற்றுக்கொள்ள இன்னும் பல தசாப்தங்கள் போகும். கருத்து முரண்பாடுகள் மனிதருக்குள் இருப்பது இயல்பு.

ஆனால் அதற்கு தீர்வு கொலையல்ல. ஆனால் தமிழரின் துரதிஷ்டம் கொலைகளை நியாயப்படுத்தவென்றே தமிழ் மக்கள் மத்தியில் பத்திரிகைகளும் அறிவாளிகளும் உள்ளனரே. தமிழனின் தலையெழுத்தை யாரால் தான் மாற்ற முடியும்.

**இனப்பிரச்சனைக்கு தீர்வே கிடையாதா?**

*ஆ. நடேசபிள்ளை, வத்தளை.*

மனதைத் தளரவிடாதீர்கள். நம்பிக்கை தான் வாழ்க்கை. எந்த ஓர் பிரச்சனைக்கும் தீர்வு வந்தே ஆக வேண்டும். நிட்சயமாக இனப்பிரச்சனைக்கும் தீர்வு ஏற்படத்தான் வேண்டும். ஆனால் தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் அநாவசிய உயிரிழப்புக்கள். அது தான் வேதனையானது. பிரச்சனை தீரவே தீராதா என்பதை விட அதனைத் தீர்ப்பதற்கு நாம் எல்லோரும் இணைந்து செயற்படுவோம்.

**சமவாய்ப்பு சட்டத்தை பற்றி உங்கள் கருத்தென்ன?**

*வ. சாந்தலிங்கம், காரைதீவு.*

தீர்வுத்திட்டம் குப்பைக் கூடைக்குள் போக, இது ஓர் புது ஏமாற்று நாடகம். ஆனால் மருண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேயென்பது போல சிங்கள இனவெறியருக்கு எதனைப் பார்த்தாலும், தமிழருக்கு ஏதாவது கிடைத்து விடுமோ என்ற பயம். இதனால் சம வாய்ப்புச் சட்டத்தையும் எதிர்க்கின்றார்கள். தமிழருக்கு சம வாய்ப்புச் சட்டத்தில் எதுவும் கிடைக்காவிட்டாலும் சிங்கள மக்களுக்கு அது தேவையான சட்டமே. ●




## அபாயம்

பாதுகாப்புக்கு பக்கபலமாக இருக்கும் அமைச்சர் ஒருவர் மேலதிகமாக மின்சார எரிசக்தி அமைச்சுக்கும் பொறுப்பாக இருக்கிறார் இதனால்தான் புலிகள் மின்மாற்றிகளை ஒரு இராணுவ இலக்காக நினைத்து தாக்குகிறார்கள் என ஆளும் வட்டாரத்தில் குசு குசுக்கப்படுகின்றது. இதனால் பாதிக்கப்படுவது தமிழர்கள் மட்டுமல்ல சிங்கள மக்களும்தான். எதற்கும் அமைச்சர் மேலதிக பொறுப்பில் இருந்து இறங்கி சிங்கள மக்களிடத்திலாவது புண்ணியம் கட்டிக்கொண்டால் அவருக்கு நல்லது. இல்லாவிட்டால் முன்னதும் கை நழுவிப்போய்விடும்.

## விடாக்கண்டன்–கொடாக்கண்டன்

யாழ் மாவட்டத்தின் அபிவிருத்திக்கான பண ஒதுக்கீடு தனக்கு கிடைக்காததால்-மனம் நொந்துபோமாயிருக்கிறார்; யாழ் எம்.பி. இலியாஸ். பாராளுமன்ற வளாகத்தில் தர்ணா செய்யப்போவதாகவும் முரசொலித்திருக்கிறார். அரசாங்கம் திட்டங்களுக்காக பணம் ஒதுக்கிக் கொடுக்கிறது. அதை சேரவேண்டியவர்களுக்கு பிரித்துக் கொடுத்தால் என்ன குடியா மூழ்கிப் போய்விடும் என்று கேட்கிறார் முஸ்லீம் காங்கிரஸ் தலைவர். முடியாது என்கிறார் ஈ.பி.டி.பி நாயகம். இவ்விவகாரத்தில் இரு தலைவர்களுக்கும் சொற்போர் முற்றி-மற்போர் நிகழாமல் இருந்தால் சரி.

## பேசுவதற்கு முன் யோசனை செய்

ஐ.நா சபை அதிகாரிகள் மலேரியா நுளம்புக்கு மருந்தடிப்பதுடன் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று வெளிவிவகாரத்தாரின் பேச்சு விவகாரமாய் போச்சு. இந்த நாத்தடிப்பான பேச்சால் பலத்த கண்டனதுக்குள்ளான அவர் சக்தியானவருக்கும் சங்கடத்தை ஏற்படுத்திவிட்டார். அதுதான் லண்டனுக்கு வந்ததும் வராததுமாக பி.பி.சிக்கு பேட்டி அளித்து சமாளித்திருக்கிறார். நுணலும் தன் வாயால் கெடும் என்பது வெளிவிவகாரத்தாருக்கு பொருந்தும்.

## எதிரிக்கு எதிரி நண்பன்

அமெரிக்காவும்-இந்தியாவும் புலிகளை தடைசெய்திருக்கிறார்கள். இது நல்ல செய்திதான். ஆனால் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை கண்டுகொள்ளாமல் இருப்பது தான் வேதனை. புலிகளை ஒழித்துவிட்டால் தமிழர் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று நினைக்கினம் போல. புலிகளுக்கு அப்பால் இந்த நாட்டில் லட்சக்கணக்கான தமிழர்களும் வாழ்கிறார்கள் என்பதை மறந்து விட்டதுதான் ஆச்சரியம். தமிழர்களின் அரசியல் உரிமைகளை கொடுக்க மறுக்கும் இலங்கை அரசையும் கொஞ்சம் தட்டி வைப்பது நல்லது.

## சொல்வதைத் திருந்தச் சொல்

'மன்னார் அரச அதிபர் தடுத்துவைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார். அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்பது தவறான செய்தியாகும்.' என்று பொறுப்பு வாய்ந்த அமைச்சர் ஒருவர் சொல்லியிருக்கிறார். அப்போ! கைது செய்யப்படாமல் எப்படி தடுத்துவைக்கமுடியும். தடுத்து வைப்பதற்கு முன் கைது செய்தால் தானே அது சாத்தியம். தடுத்துவைப்பது வேறு. கைது செய்வது வேறா? என்னய்யா குழப்புகிறீர்! நான் குழப்பவில்லை. பாதுகாப்பான அமைச்சர் குழம்பிப்போய் எல்லோரையும் குழப்புகிறார். முழுப் பூசணிக்காயை சோற்றுக்குள் புதைக்கப் பார்ப்பது சரியோ!.

## தூங்காதே தம்பி தூங்காதே

கிழக்குத் திமோரில் ஐ.நா.சபை தலையிட்டது ஆட்சியாளர்களுக்கு புளியைக் கரைத்திருக்கிறது. எங்கே-இங்கேயும் வந்து தொலைத்து விடப்போகிறார்கள் என்று. தலையிட வேண்டும் என்று தமிழ்க் கட்சிகளும்-விடுதலைப்புலிகளும் கேட்டிருப்பதும் இந்த உதறலுக்கு காரணம். சும்மா கேட்டுக் கேட்டு நிற்காது தமிழ்க் கட்சிகள் ஒன்று சேர்ந்து போராட்டத்தில் குதிக்க வேண்டும் என்பதுதான் தமிழ் மக்களின் விருப்பமும் கூட. கூட்டணியினர் மற்றவர்களை அழைத்து போராட்டத்தில் குதிப்பார்களா? அல்லது வழமைபோல் கொர்...கொர்...கொர்...கொர்.ர்ர்.தான்.

## தமிழர்கள் இளித்த வாயர்கள் அல்ல

தீர்வுப்பொதியை கடந்த ஐந்து வருடங்களாக தூக்கி சுமந்து களைத்து போயிருக்கினம் ஆளவந்தோர். தாமதத்திற்கு காரணம் கேட்டால் ஆளுக்கொரு கதை விடுகினம். 2000 ஆண்டுக்குள் தமிழர் பிரச்சனை ஒரு முடிவுக்கு வரும் என்று சக்தியானவர் கலங்கடிக்கிறார். அப்படியானால் தேர்தலுக்கு முன்பா-அல்லது பின்பா. கொஞ்சம் விளக்கமாகச் சொன்னால் எல்லோருக்கும் புரிந்துவிடும் அல்லோ.

## சாத்தான் வேதம் ஓதுகின்றது

ஈ.பி.டி.பி தலைவரை, தாக்கியவர்களுக்கு புலிகள் உதவி செய்வதை நிறுத்திவிட்டார்களாம்! இனிமேல் களுத்துறை சிறைக்கு யார் பார்வையிட வந்தாலும் தாக்குதல் நடக்காதாம். புலிகள் உத்தரவு. சந்திக்கு வராத சங்கதி யார் யாருக்கு சோப்பு போடுகிறார். டக்ளஸ்தேவானந்தா உசார். உசார். மீண்டும் ஒரு தாக்குதலுக்கு சதி வலை பின்னப்படுகின்றது. தேன் தடவுகிறார் நரியார்! நம்பாதே. நம்பாதே!. களுத்துறை சிறைப் பக்கம் உங்கள் தலைக் கறுப்பு வேண்டவே வேண்டாம்.

## முகவரி தெரியாத தமிழர்

யார் இந்த கொழும்புத் தமிழர் ப(ன்)ணிக்குழுத் தலைவர் எங்கேயிருந்து புதுசா முளைத்திருக்கிறார். தமிழர் போராட்டத்திற்கும் இவருக்கும் என்ன சம்பந்தம். அவரின் தமிழ் பற்று நாடி நரம்பையல்லோ புடைக்க வைக்கிறது. தமிழ்க் கட்சித் தலைவர்களுடன் சரிசமமாக உட்கார்ந்து பேசும் அளவுக்கு வளர்ந்திருக்கிறார். சும்மா பேசினால் மட்டும் பரவாயில்லை. ஏதோ தான் பிரபாகரனுக்கு பக்கத்தில் இருந்து விட்டு வந்த மாதிரி அல்லோ கதை அளக்கிறார். தாங்க முடியவில்லை இந்தாளின் இம்சையை வயது போன நேரத்தில்-பொழுதுபோக்காக அரசியல் பேசவந்து வம்பில் மாட்டிக்கொள்ளாமல் இருப்பது நல்லது. அதுதானே 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள' நினைக்கிறாரோ.

# ரணிலின் அறிக்கையி......

ஆனால் தேர்தலின் போது மலையகத் தமிழ் வாக்காளர்களிடையே ஐ.தே.கவுக்கும், இ.தொ.காவுக்கும் இடையிலேயே பிரதானமான போட்டி நிலவும். அதேபோல் கிழக்கில் முஸ்லிம் வாக்காளர்களிடையே தான் முஸ்லிம் கட்சிக்காரர்களுக்கும் யு.என்.பிக்கும் இடையிலேயே போட்டி. எனவே இவர்களிற்கிடையில் பாராளுமன்றத் தேர்லுக்கு முந்திய உடன்பாட்டிற்கு சாத்தியங்கள் குறைவானதேயாகும்.

வடக்கு–கிழக்கு மாகாண வாக்காளர்கள் தொடர்பாக தமிழ்க்கட்சிகள் என்ன நிலையைக் கொண்டிருக்கப் போகிறார்கள்? ஐக்கிய தேசியக்கட்சிக்கு தேர்தலுக்கு முன்னரோ பின்னரோ சாதகமாக இருப்பார்களா? என்பதில் ஐ.தே.க சந்தேகம் கொண்டிருக்கிறது.

### வடக்கு-கிழக்கு தமிழ் வாக்குகள்

ஐக்கிய தேசியக்கட்சியைப் பொறுத்தவரையில் தமிழ் வாக்குகளின் பெரும்பான்மையானவற்றைத் தான் பெறவேண்டும்; குறைந்த பட்சம் சந்திரிகா கட்சிக்கும் ரெலோ தவிர்ந்த ஏனைய தமிழ்க்கட்சிகளுக்கும் கிடைக்கும் அளவையாவது எந்தளவு குறைக்க முடியுமோ அந்தளவு குறைப்பதற்கு முயற்சிக்க வேண்டுமென்பதே ஐ.தே.கவின் நிலை அடுத்த பாராளுமன்றத்தில் தமிழ்க்கட்சிகள் பலமாக இருப்பதையும் அது விரும்பவில்லை.

தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைக்கவும் ஐ.தே.க இப்போது விரும்பவில்லை. அவ்வாறு ஏற்பட்டால் அரசியல் தீர்வு தொடர்பாக ஒரு நிலைப்பாட்டை வெளியிட வேண்டியேற்படுமென்று ஐ.தே.க. கருதுகின்றது.

அரசியல் தீர்வு மீது உண்மையான ஈடுபாடு இல்லாத ஐ.தே.க. அதேவாறான நிலைப்பாட்டைக் கொண்ட புலிகளின் உதவியை நாடியிருப்பது இயல்பானதே.

புலிகள் தேர்தலில் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஒரு குழுவை நிறுத்தியோ பங்கு பற்ற மாட்டார்கள் என்பதே ஐ.தே.கவின் எதிர்பார்ப்பு.

இதனால் புலிகளின் மறைமுகமான ஆதரவுடன் ரணில் நேரடியாக தமிழ் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதிப் பதவியைப் பெறவும் பாராளுமன்றத்தைக் கைப்பற்றவும் முயற்சிக்கின்றார்.

அதற்காக இடைக்கால விலையொன்றைக் கொடுக்க ஐ.தே.க தயாராகும். அதற்கு அடுத்த எழும் யுத்தத்தைப் பற்றியும் ஐ.தே.க நன்கறியும். புலிகளுடன் சிறிது காலம் பேசுவதன் மூலமோ, ஒரு தற்காலிக யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்துவதன் மூலமோ சிங்களப்பேரினவாதத்திற்குத் தேவையான நீண்டகால நலனை இழந்துவிடப் போவதில்லை என்பதும் ஐ.தே.கவுக்கு தெரியும். ஐ.தே.கவுக்கு இப்போதைக்கு தேவைப்படுவது தமிழ் வாக்குகளே.

ஏற்கனவே வடக்கு–கிழக்கு மாகாணத்தில் தமிழர் பகுதிகளில் பெரும்பாலும் அரசாங்க அதிகாரிகள் புலியின் கட்டளைப்படியே இயங்குகிறார்கள் என்பதை நன்கறிந்த ஐ.தே.க.புரிந்து வைத்துள்ளது–புலிகளுக்கும் இந்த ஓரிரு விடயங்களே தேவைப்படுகின்றன.

★ இராணுவத்தைப் பின்வாங்கும் படி புலிகள் முதலில் கேட்கப் போவதில்லை.

★ யாழ்ப்பாண வீதியைத் திறப்பதற்கு புலிகளும் விடப்போவதில்லை.

★ புனர் நிர்மாண நடவடிக்கைகளில் பெரிய அளவில் எதையும் கோரப்போவதில்லை.

★ வன்னியில் அடைக்கப்பட்டிருக்கும் யாழ்ப்பாண மக்கள் யாழ்ப்பாணம் திரும்பிச்சென்று சுமுகமாக வாழப் புலிகள் அனுமதிக்கப் போவதில்லை.

திருகோணமலைத் துறைமுகம் மாகாண நிர்வாகத்தின் கீழே கொண்டுவரப்படும் என்று கூறும் ரணிலின் கொள்கைப் பிரகடனத்தில் எந்தவித அர்த்தமும் இல்லை சந்திரிகாவின் அரசியல் தீர்வுத்திட்டத்தில் ஆளுநர் முதலமைச்சரின் ஆலோசனையின் பேரில் நியமிக்கப்படுவார் என்று சொல்

7ம் பக்கம் தொடர்ச்சி

வதில் எந்தவித அர்த்த புஸ்டியுமில்லையோ அதே போன்றது தான் இந்த துறைமுக விவகாரமும்....

### இச்சந்தர்ப்பத்தில் எழும் சில கேள்விகள்

1. சந்திரிகாவின் அரசியல் திட்டம் இலங்கையைப் பிரிப்பதற்கான முதற்படி என்று கூறும் ரணில், சந்திரிகாவின் திட்டம் தமிழர்களின் அபிலாஷைகளின் குறைந்த பட்சத்திற்குக்கூட தீர்வாகாது எனக்கூறும் புலிகளுடன் எந்தவகையான ஓர் அரசியற் தீர்வுத்திட்டத்திற்கு உடன்படப் போகிறார்?

2. ஜனநாயக ரீதியான அரசியற் செயற்பாட்டு முறைகளையும் ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒரு நியாயமான அரசியல் தீர்வையும் ஏற்று நிற்கும் தமிழ் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கோ, ஓர் உடன்பாட்டுக்கு வருவதற்கோ முடியாத ரணில் விக்கிரமசிங்கா பிரபாகரனுடன் எப்படி எந்த அடிப்படையில் ஓர் உடன்பாட்டுக்கு வருவது சாத்தியமாகும்?

3. தமிழ் மக்களின் குறைந்த பட்ச அபிலாஷைகளுக்கு நியாயமானதொரு அரசியற் தீர்வுத்திட்டத்தை ஐ.தே.கட்சி இந்த நாட்டு மக்களின் முன்னால் வைக்குமா? அப்படியொன்றைப் பாராளுமன்றத்தில் ஏன் இப்போதே ஐ.தே.க முன்வைக்கக்கூடாது?14 ஐ.தே.கவினால் முன்வைக்கப்படக் கூடிய அரசியற் தீர்வுத்திட்டத்தை விடக் குறைவான ஒன்றுக்கு பிரபாகரன் உடன்படப்போவதில்லை என்பது அனைவரும் அறிந்த விடயம்.

அப்படியானால் புலிகளுடன் ரகசியமாகப் பேச்சுவார்த்தை நடாத்தும் வாய்ப்பை பெற்றுள்ள ரணில் விக்கிரமசிங்கா பிரபாகரன் ஏற்றுக்கொள்ளக்கூடியதெனத்தான் கருதும் ஒரு தீர்வுத்திட்டத்தை ஏன் இப்பொழுதே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியாது?

ரணிலினால் வெளியிடப்பட்டுள்ள ஐ.தே.கட்சியின் கொள்கை நிலைப்பாட்டு அறிக்கை என்பது வெறும் தேர்தற் தந்திரோபாயமாக மட்டுமே அரசியல் அவதானிகள் கருதகின்றனர்.

ஒருவேளை ரணில் கூறும் யுத்த நிறுத்தம், இடைக்காலநிர்வாகம், பேச்சுவார்த்தை எல்லாம் நடைபெறும் காலத்தில் புலிகளால் மேற்கொள்ளப்படும் கொலைகளுக்கும், பின்னர் அதெல்லாம் முறிவடைந்து மீண்டெழும் வேகம் கொண்ட யுத்தத்தால் மேலதிகமாகக் கொல்லப்படப்போகும் பல்லாயிரக்கணக்கான சாதாரண மக்களின் உயிர்ப்பலிகளுக்கும் சில ஆயிரம் இளைஞர்களின் உயிர்பலிகளுக்கும் ரணில் விக்கிரமசிங்காவும் ஐ.தே.கவும் பகிரங்கமாகவும் பொறுப்பேற்று அதன் பின்னர் ஜனாதிபதி சந்திரிகாவின் தீர்வுத்திட்டத்தை செழுமைப்படுத்தி நிறைவேற்றும் முயற்சியில் ஒத்துழைப்பார்களா? தாம் ஆட்சிக்கு வந்தால் தாமே முன்முயற்சி எடுப்பார்கள்?.

என்பதற்கான பதிலை இப்போதே ஐ.தே.க உறுதியாகக் கூறினால் தான் எல்லாம் அறிந்திருந்தும் இத்தனைக்கும் பின்னரும் புலிகளுக்கு மீண்டும் ஒரு தடவை சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமெனக்கூறுவதில் அர்த்தம் இருக்க முடியும்.

எந்த வகையில் பார்த்தாலும், ரணில் உண்மையானவராக இருந்தால் ஜனாதிபதி சந்திரிகாவின் அரசியற் தீர்வுத்திட்டத்தையும், தமிழ்க்கட்சிகளுடன் உடன்பாட்டுக்கு வரவேண்டியதன் அவசியத்தையும் அவர் நிராகரித்து விட்டுச் செயற்படமுடியாது.

அல்லது இந்தப் புதிய கொள்கை அறிக்கை வெறுமனே தேர்தல் ஒன்றுக்கான அரசியற் தந்திரமாக மட்டுமே இருக்குமானால், அரசின் தீர்வுத்திட்டத்தை நிறைவேற்றினாரோ இல்லையோ, குறைந்த பட்சம், அதற்காக சிங்கள மக்கள் மத்தியில் வெளிப்படையாகப் பிரச்சாரம் செய்துவரும் சந்திரிகா பண்டார நாயக்காவும், G.L பீரிஸ், மங்கள சமரவீர, டிலோன் போன்ற அமைச்சர்களும் ரணில் விக்கிரமங்காவையும் அவரது கட்சியினரையும் விட எத்தனையே மடங்கு நேர்மையானவர்கள் என்றும், எதிர்காலத்திலும் தொடர்ந்து அரசியில் தீர்வுக்காக விடாது பாடுபடுவார்கள் என்றுமே நம்ப வேண்டியுள்ளது.


தமிழர்கள் இந்த விடயத்தில் தர்க்க பூர்வமாகவும் புத்தி பூர்வமாகவும் முடிவு எடுத்து செயற்படவில்லை என்றால் அரசனை நம்பி புருஷனை கைவிட்ட கதையாகவே முடியும்.

ஏற்கனவே நல்ல சந்தர்ப்பங்களையெல்லாம் தவறவிட்ட தமிழ்மக்கள் இன்று நிலவும் குறைந்த பட்சவாப்புக்களையும் இழந்துவிடாதிருக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

கையிலிருக்கும் களாக்காயைக் கூடத்தர மறுக்கும் ரணில்விக்கிரமசிங்காவும் அவரது ஆட்களும், தங்களோடு கண்ணக்கட்டிக்கொண்டு காததூரம் பின்வந்தால் பலாக்காய் தருவார்களாம்.

ஈழத் தமிழர்களை நிரந்தரமான மோடயாக்கர்களாக ஆக்க முற்படுகிறாரா திரு. ரணில்விக்கிரமசிங்கா? ●

# குறுக்கெழுத்துப் போட்டி–46




### இடமிருந்து வலம்

1. பண்டிகைத் தேதி சண்டேயில் வந்தால் டேக் இற் ஈஸி. இவ்வருடம் இது வந்திருக்கிறது.
4. நம்நாட்டுத் தொலைக்காட்சி சேவை.
7. நாட்டியம். (தலைகீழ்)
8. கேரளாவிலுள்ள ஐயப்ப சுவாமியின் மலை.
9. உலோக வேலை செய்வோரின் வேலைத்தலம்.
10. ஒருவர் மனதை ஒருவர் அறிய உதவும் சேவை இது. உறவை இணைக்கும் பாலம் இது.
11. ஆட்டின் பால் தெரியும்... எருமைப் பால் தெரியும்,... இது ஆட்டுக்கும் எருமைக்கும் ஆண்பால்.
12. வல்லவன் பம்பரம் இங்கேயும் ஆடும்.
15. ஒரு ராகம். (தலைகீழ்)
18. இது நகலல்ல. (தலைகீழ்)
20. துறவு பூண்டதற்கு முந்திய வாழ்க்கை நிலை. (குழம்பி)
22. பயமுறுத்தல் குழம்பியிருக்கிறது.
25. குத்துச்சண்டைக்கான களம்.
26. சோற்றில் ஊற்றிச் சாப்பிட இது...
27. நல்வழி சொல்வார் வீட்டிலே.
28. பிசாசை இப்படியும் சொல்வதுண்டு. (தலைகீழ்)

### மேலிருந்து கீழ்

1. வருவதை எல்லாம் முன்னுணர்ந்து சொல்பவன் இவன் – இந்த நாட்டில் எப்போது சமாதானம் வரும் என்பதைத் தவிர.
2. முழுமையை இரண்டாக்கு.
3. இளவேனிற் பருவம்.
4. வடிவம்.
5. ஒன்றின் மொத்த அல்லது முழு அம்சத்தையும் சொல்வது.
6. ஒரே நேரத்தில் நிகழும் எட்டுச் செயல்களைத் தன் கவனத்தில் இருத்திச் செயற்படக் கூடியவர், இங்கே தலைகீழாக நிற்கிறார்.
7. மருத்துவ நிழல் தரும் மரம் கடைசி எழுத்தின்றி. (தலைகீழ்)
8. கூட்டல் குறி.
13. தளத்தின் சமநிலையை அறியப் பயன்படுத்தும் சாதனம். விமர்சனங்கள் எழுத புதுமைப்பித்தன் பயன்படுத்திய புனைபெயர்.
14. காலைவேளையில் பனித்துளிக் கிரீடம் அணிந்த கம்பீரம். ஆனால் பாவம், காலில் மிதிபடவே பிறந்தது.
16. கடையடைப்பு.
17. மறதிக்கு மருந்து இதுதான் என்று அந்நாளில் மாஸ்ரர் சொல்வது.
19. இந்திய மாநிலங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட சபை.
21. புவி.
23. தூறலாய் விழும் சிறுமழை. (தலைகீழ்)
24. முதலெழுத்தில்லாத விருட்சம்.
25. கடைசி எழுத்துத் தொலைத்து விட்ட ஆத்திரம்.

### குறுக்கெழுத்துப் போட்டி–45 விடைகள்:

| இடமிருந்து வலம்: | மேலிருந்து கீழ்: |
|---|---|
| 1. நீலன்திருச்செல்வம் | 1. நீதிபதி |
| 8. வருக | 2. கலவன் |
| 9. வேலி | 3. திருவிளையாடல் |
| 10. பல்லவி | 4. கரு |
| 11. அதாவது | 5. செந்தாமரை |
| 13. களை | 6. வலிது |
| 14. கமலை | 7. வேம் |
| 17. யாத்திரை | 11. அகதிமுகாம் |
| 18. வரி | 12. வலை |
| 21. இடது | 15. அரிது |
| 22. கந்தல் | 16. இயந்திரம் |
| 23. காவி | 18. வடலி |
| 25. வதிரி | 19. தகவல் |
| 26. தம்பூரா | 20. சரிதம் |
| 29. உரசல் | 24. விபூதி |
| 31. திட்டம் | 27. ராட்டை |
| 33. தைலம் | 28. பம்பை |
| 34. பகடை | 30. உதை 32. கட |

**சரியான விடை எழுதி ரூபா 100 பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:**

கி. பரமேஸ்வரன் (சுரேன்)
இல; 92,துட்டுவாகை, வீரபுரம்,
வவுனியா.

**பாராட்டுப் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து பேர்கள் வருமாறு:**

1. செல்வி க. சிவஜோதி
   டச்சு றோட், சாவகச்சேரி
2. வ. மணிவண்ணன்
   ஈரப்பெரியகுளம், வவுனியா.
3. பே. கிங்ஸ்லி
   தாண்டவன்வெளி, மட்டக்களப்பு
4. சி. ரூபன்
   பாலையூற்று, திருமலை..
5. ப. அனுசியா
   பள்ளிமுனை, மன்னார்.

**விடைகளை மட்டும் தனியாக ஒரு தபாலட்டையில் எழுதி எதிர்வரும் 30ந் திகதிக்கு முன் அனுப்பி வையுங்கள்.**

**புதிய கண்ணோட்டம்
த.பெ.இல: 442
கொழும்பு**

# புதிய நூற்றாண்.........

1ம் பக்கம் தொடர்ச்சி

களுடன் ஏதோ ஒரு அளவில் தொடர்புள்ளவர்கள். கடந்த காலத்தின் அனுபவங்கள் அவர்களுக்கு உண்டு.

அதேவேளை சிறுபான்மை இன கட்சிகளின் ஆதரவு இருந்தும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான முன் முயற்சி தாக்கமானதாக இருக்கவில்லை என்றே கூற வேண்டும்.

தடைகள் இருப்பினும் தீர்மானகரமான முன் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருந்தால் அதிகாரப்பரவலாக்கலுக்கு எதிரானவர்களை அம்பலப்படுத்தியிருக்க முடியும்.

தீர்வுத்திட்ட யோசனைகள் கால ஓட்டத்தில் தேய்ந்துபோன நிலைதான் காணப்பட்டது. அதற்கு உயிர் இருக்கும்போதே அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்க வேண்டும். அல்லது சர்வஜன வாக்கெடுப்புக்குச் சென்றிருக்கவேண்டும்.

இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் அதிகாரப் பரவலாக்கலுக்கு எதிரானவர்கள் தெளிவாக அம்பலப்படுத்தப்பட்டிருப்பார்கள். ஆனால் தீர்வுத்திட்ட யோசனைகளை அமுல்படுத்தும் சாத்தியம் இருந்திருக்குமா? என்பது சந்தேகமானதே.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட அதிகாரப்பரவலாக்கல் பற்றிய கருத்து வளர்த்தெடுக்கப் படவேண்டும்.

தீர்வுயோசனைகள் உள்ளடக்கம் நிறைந்ததாக இருக்க வேண்டும், அடுத்த நூற்றாண்டின் ஆரம்பமும் எமது நாட்டில் இரத்தக் கறை படிந்ததாக இருக்கக்கூடாது, இனங்களின் சமத்துவமான ஐக்கியம் நிலைநாட்டப்படவேண்டும்.

21ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வாழ்ந்த இலங்கை சமூகத்தினர் மனிதகுலத்தின் நாகரிகமான பிரிவினர் என்ற வரலாறு உருவாக்கப்படவேண்டும். செய்வோமா? செய்வார்களா? ●

# பொம்(ய்)மையாகி விட்ட வெகுஜன அமைப்புக்கள்

ஒரு சமூகத்தில் அரசியற் கட்சிகள் ஒட்டு மொத்த சமூகத்தினதும் ஈடேற்றத்திற்காக செயற்பட்டு வருகின்ற அதேவேளை குறித்த பிரிவினரது பிரத்யேகமான பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு வெகுஜன அமைப்புக்கள் செயற்பட்டு வருகின்றன.

மாணவர்கள் அமைப்பு, தொழிலாளர் சங்கங்கள், பெண்கள் அமைப்புக்கள் யாவும் இதில் அடங்கும். வெகுஜன அமைப்புக்கள் குறித்த பிரிவினரின் பிரத்யேகமான பிரச்சனைகளை முதன்மைப்படுத்தி செயற்படுகின்ற போதும், பொதுவான அரசியற் பிரச்சனைகள் என்ற போக்குகள் இந்த வெகுஜன அமைப்புக்கள் மீதும் தாக்கம் செய்யவே செய்யும்.

மறுதலையாக சமூகம் பற்றிய பிரக்ஞை உள்ள வெகுஜன அமைப்புக்களின் சுதந்திரமான செயற்



பாடுகள் வெகுஜனங்கள் மத்தியில் ஏற்படுத்தும் விழிப்புணர்வு அரசியற் போக்கில் மாறுதலை ஏற்படுத்த வல்லது.

வெகுஜன அமைப்பு ஒன்றை அரசியல் இயக்கம் கட்டுப்படுத்துவது சரியா? தவறா? வெகுஜன அமைப்புக்களுக்கும், ஆயுதம் தாங்கிய இயக்கங்களுக்கும் இடையேயான உறவு எவ்வகையானது? அரசியற் கட்சிகளின் முன்னணி அமைப்புகளிற்கும், பிற வெகுஜன அமைப்புகளிற்குமிடையே உள்ள வித்தியாசம் என்ன? என்பது பற்றியெல்லாம் 1985, 1986 காலப்பகுதிகளில், தமிழ் அரசியற் சூழலில் ஆரோக்கியமான விவாதங்கள் முன்வைக்கப்பட்டன.

இயக்கங்கள் ஒவ்வொன்றினதும் நேரடிக்கட்டுப்பாட்டின் கீழ் செயற்பட்டு, அந்த இயக்கங்களின் கொள்கையின் அடிப்படையில் அமைந்த செயற்திட்டங்களே முன்னெடுத்துச் செல்லும் முன்னணி அமைப்புக்கள் போலன்றி வெகுஜன அமைப்புக்கள் சுதந்திரமாகச் செயற்பட அனுமதிக்கப்பட வேண்டும். வேறுபட்ட கருத்து, கொள்கை உடையவர்களாயினும் அது அவர்களது உரிமை என்ற கருத்தே பலம் பெற்றிருந்தது.

இதனை ஏற்றுக்கொள்ளாது புலிகள், தொழிற்சங்கத் தலைவர் விஜயானந்தனை படுகொலை செய்தபோது அதற்கெதிராகக் குரல் எழுப்பும் ஆற்றல் வெகுஜன அமைப்புக்களுக்கு இருந்தது குறிப்பிடத்தக்கது.

கருத்து முரண்பாடுகள், கொள்கை ரீதியான வேறுபாடுகள் காணப்பட்டபோதும், தமிழ் மக்களது பொதுவான பிரச்சனைகளில் மக்கள் நலன்கருதி வெகுஜன அமைப்புக்கள், பொது வேலைத்திட்டமொன்றின் கீழ் இயக்கங்களுடன் ஐக்கியப்பட்டுச் செயற்பட வேண்டிய சந்தர்ப்பங்களில் அவ்வாறு செயற்படத் தவறவில்லை.

அதேவேளை எந்த விடுதலை இயக்கமாயினும் தவறிளைக்கும் போதும் பாகுபாடின்றி, பாரபட்சமின்றி உரிமையோடு, உறுதியோடு அவற்றைக் கண்டிப்பதற்கும் பின்நிற்கவில்லை.

இதனால் மக்களின் குரலுக்குச் செவிசாய்க்க வேண்டும். மக்களுக்கு பதில் சொல்ல வேண்டும் நிர்ப்பந்தம் எல்லா இயக்கங்களுக்கும் இருந்தது. களத்தில் நின்று போராடுவதால் எதுவும் செய்யலாம், யாருக்கும் பதில் சொல்ல வேண்டியதில்லை, என்று இயக்கங்களும் நினைக்கவில்லை.

களத்தில் நின்று போராடுபவர்கள் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்கள், எது செய்தாலும் சகித்துக் கொள்ள வேண்டும், என்று பொது மக்களும் நினைக்கவில்லை. இத்தகையதொரு சூழல்தான் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகள் மீறப்படுவதிலிருந்து தடுத்ததுடன் மக்களின் பங்களிப்புடன் போராட்டம் பரிணமிப்பதற்கும் காரணமாய் அமைந்தது.

அரசியல் இயக்கங்களை ஒவ்வொன்றாகத் தடைசெய்து முடிந்த கையோடு புலிகள் வெகுஜன அமைப்புக்களின் செயற்பாடுகளுக்கும் தடைவிதித்தனர்.

1986ம் ஆண்டிற்குப்பின்னர் எந்த ஒரு வெகுஜன அமைப்பும் சுதந்திரமாக இயங்குவதற்கு அனுமதிக்கப்படவில்லை. அது கலை இலக்கியம் சார்ந்த அமைப்புக்களாயினும், அரச சார்பற்ற நிறுவனங்களாயினும் அவை புலிகளின் நேரடிக்கட்டுப்பாட்டின் கீழ் கண்காணிப்பின் கீழ் மட்டுமே செயற்பட முடிந்தது.

அவ்வாறு செயற்படச்சம்மதம் இல்லாதவர்களின் கதையும் அத்துடன் முடிந்தது. இதன் பின்னர் வெகுஜன அமைப்புக்கள் எல்லாமே விரும்பியோ விரும்பாமலோ விடுதலைப்புலிகளின் முன்னணி அமைப்புக்களாகவே செயற்பட வேண்டிய நிலை தோன்றியது.

அவை பெயரளவில் தம்மை வெகுஜன அமைப்புக்களாக வெளியே காட்டிக்கொண்டாலும் புலிகளின் நிகழ்ச்சி நிரலின் படியே செயற்பட முடிந்தது. நீண்ட காலமாக புலிகளுக்காகவே உழைத்த சிலர் அரசாங்கம் விட்டு வைத்திருக்கும் ஜனநாயகச் சூழலைப்பயன்படுத்தி இப்போதும் புலிகளின் நிகழ்ச்சி நிரலின்படி செயற்பட்டு வருவது கசிந்து போன ரகசியம்.

ஜனநாயக வழியிலான போராட்டங்களில் நேரடியாகப் பங்கெடுக்க முடியாத சந்தர்ப்பங்களில், கடந்த காலங்களில் புலிகளும் இதர இயக்கங்களைச் சேர்ந்தவர்களும் எவ்வாறு நடந்துகொண்டார்கள் என்பது யாழ் குடாநாட்டு மக்களுக்குத் தெரியாத புரியாத புதிய விடயமுமில்லை.

இன்னும் இதர அரசியல் இயக்கங்கள், கட்சிகள் செயற்படுவதை அனுமதிக்காத, தனிமனிதர்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளை அங்கீகரிக்காத, மாற்றுக்கருத்தைச் சகித்துக்கொள்ள முடியாத புலிகள், யாழ் குடாநாடு முழுமையாகத் தமது நிர்வாகத்தின் கீழ் இருந்த காலத்தில் மாணவர் அமைப்புக்களையோ, தொழிற்சங்கங்களையோ, அரச சார்பற்ற நிறுவனங்களையோ சுதந்திரமாகச் செயற்பட அனுமதிக்காத புலிகள் இன்று பல்வேறு வெகுஜன அமைப்புக்கள் சுதந்திரமாகச் செயற்படுவதற்கு அனுமதித்துள்ளார்கள் என்றால் அதற்கு காரணம் இல்லாமல் இல்லை.

பகிரங்கமாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடு படமுடியாத நிலையிலுள்ள புலிகளுக்கு பகிரங்கமாக இயங்கும் தமிழ் வெகுஜன அமைப்புக்களின் நடவடிக்கைகள் சாதகமான தாய் அமைந்திருப்பதனாலேயே, அவற்றின் ஆயுள் நீடித்திருக்கின்றது.

புலிகளின் கடிதத்தைக்கண்ட மாத்திரத்திலேயே அடங்கி ஒடுங்கிப்போகுமளவிற்கு தமிழ் மக்களை வளர்த்தெடுத்துள்ள புலிகள் ஒரு கடிதத்தின் மூலமாகவே தாம் நினைப்பதைச் சாதிக்குமளவிற்கு வல்லமை பொருந்தியநிலையில் அதனைப் பிரயோகிப்பதற்குக் காரணம் வேறெதுவுமிருப்பதாகத் தெரியவில்லை.

இன்னிலையில் தமிழ் வெகுஜன அமைப்புக்கள் சில தப்பிப்பிளைப்பதற்குத் தேர்ந்தெடுத்திருக்கும் உபாயம், ஏற்கனவே சில அரசியற் கட்சித்தலைவர்கள் பின்பற்றிய, பின்பற்றிவருகின்ற உபாயந்தான், அதன் மூலம் தமது இருப்பை உறுதிப்படுத்திக்கொள்ளலாம் என எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

★ புலிகளின் நடவடிக்களை விமர்சிப்பதை, கேள்விக்குள்ளாக்குவதைத் தவிர்த்துக்கொள்ளுதல்.

★ புலிகள் எதிரிகள், என்று சுட்டுவிரலை நீட்டுபவர்களையெல்லாம் இழித்தும், பழித்தும் குற்றம் கூறியும் தமது இருப்பு புலிகளுக்கு பயன்மிக்கது எனக் காட்டிக்கொள்ளுதல்.

★ எந்த ஒரு பிரச்சினைக்கும் தீர்வு காண்பதற்கான பொறுப்பை தீர்வுகாணத்தவறியதற்கான குற்றத்தை சாமர்த்தியமாக எப்போதும் புலிகளின் எதிரிகள் மீது சுமத்திவிடுதல்.

மேற்படி உபாயங்களைக்கையாண்டு அதன் மூலம் தமது இருப்பை தக்கவைத்தக்கொள்ளலாம். என அனேக தமிழ் வெகுஜன அமைப்புக்கள் தவறாக எண்ணிக்கொண்டிருப்பதாக தோன்றுகிறது. இதற்கு அவர்களுடைய நடவடிக்கைகளே ஆதாரமாகவும் உள்ளது.

யாழ் குடாநாட்டில் இராணுவம் நிலைகொண்ட பின்னர் காணாமற்போனவர்கள் தொடர்பான உண்மைகளை வெளிக்கொண்டு வருவதற்காக செம்மணி புதைகுழி விசாரணைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டுமென, போராட்டங்களை நடாத்திய வெகுஜன அமைப்புக்கள் விசாரணைகள் மேற்கொள்ளப்படாது காலம் கடத்தப்படுவதாகவும் தடயங்கள் அழிக்கப்படுவதாகவும் கண்டனம் தெரிவித்து–ஜனாதிபதிக்கு மகஜர்களையும் அனுப்பியிருந்தன.

நீதி மன்றம் இந்த விசாரணைகளை மேற்கொள்ளுவதற்கான திகதியை அறிவித்த பின்னர், நீதிமன்றங்கள் இயங்குவதற்கு தடைவிதித்து புலிகள் கடிதம் அனுப்பியிருந்தனர். விசாரணைகளை இழுத்தடித்து காலம் தாழ்த்துவதாக அரசாங்கத்தைக் கண்டனம் செய்த வெகுஜன அமைப்புக்கள் விசாரணைக்கு புலிகள் முட்டுக்கட்டை போட்ட போது கண்டு கொள்ளாது மௌனமாகிப் போயினர்.

இடம்பெயர்வின் போது வன்னிக்குச் சென்று உணவிற்கும், உறைவிடத்திற்கும் அல்லாடுகின்ற எமது மக்கள் மருத்துவ வசதியின்றி மரணிப்பதாகவும், அவர்களின் துயர் துடைப்பதற்காக இங்கு சில வெகுஜன அமைப்புக்கள் நிதி சேகரிப்பதில் ஈடுபட்டன. துன்பத்தில் சிக்கியுள்ள எமது மக்களுக்கு உதவ முன்வந்து செயலில் இறங்கியது பாராட்டிற்குரியது.

ஆனால் யாழ் குடாநாட்டிலிருந்தும், மன்னார், முல்லைத்தீவு பகுதிகளிலிருந்தும் தமது உடமைகள் எதையும் எடுத்துச்செல்ல விடாது விரட்டப்பட்ட முஸ்லீம்கள் பல வருடங்கள் புத்தளத்தில் உள்ள முகாமகளிலிருந்து துன்பப்படுவது இன்றுவரை இந்த வெகுஜன அமைப்புக்களின் கண்களுக்குத் தெரியாமற் போனது ஏன்? அவர்கள் புலிகளால் விரட்டப்பட்டவர்கள் என்பதைத்தவிர வேறெந்தகாரணமும் இல்லை.

யாழ் குடாநாட்டில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் போக்குவரத்திற்கு போதுமான பஸ்கள் இல்லை. அனுப்பி வைக்கப்பட்ட பஸ்கள் நல்ல நிலையில் இல்லை, பெரும்பாலான இடங்களுக்கு மின்சார வசதி இல்லை, 24 மணிநேரமும் மின்சாரம் வழங்கப்படவில்லை, வெளியிடங்களுக்குப் பிரயாணம் செய்வதற்கு சொல்

**விதுரன்**

லொணா கஸ்ரங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது. அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை நாம் புறக்கணிக்கப்படுகிறோம்.

என்று தமிழ் வெகுஜன அமைப்புக்கள் அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுகளை அடுக்கியுள்ளன. இவற்றில் முற்றிலும் உண்மையில்லை என்று மறுக்க முடியாது. ஆனால் மக்களின் நலனில் உண்மையான அக்கறை கொண்டு பேசுபவர்களாயின் பல்வேறு கஸ்ரங்களை அனுபவித்து யாழ் குடாநாட்டிலிருந்து கொழும்பு செல்வதற்கிருந்த ஒரே மார்க்கமும் "லயன் ஏயார்" விமானத்தைச்சுட்டுவீழ்த்தி தடைசெய்த போதும்–யாழ் பிராந்தியப் போக்குவரத் துக்கு சபை பஸ் தாவடியில் தீக்கிரையாக்கப்பட்ட போதும்–யாழ் நகரில் மின்மாற்றிகள் குண்டுத்தாக்குதலுக்கு இலக்கான போதும் பேசியிருக்க வேண்டுமல்லவா? செய்தவர்கள் யார் என்பதைப் பொறுத்தே தமிழ் வெகுஜன அமைப்புக்களின் கண்டனங்களும் அமைகின்றன.

தொடர்ச்சி 4ம் பக்கம்

## புனைக்குத் தோழர்கள்

(சசி கிருஷ்ணமூர்த்தி 1998 ஒக்டோபரில் விமானவிபத்தில் இறந்த போது வந்த சில இரங்கற்சொற்களின் அருவருப்பாக)

நீ
அரசினின் சித்திரவதை முகாமொன்றில் செத்திருக்கலாமே!
அவர்கள் முழுகடித்த கலமொன்றில் போயிருக்கலாமே!
அவர்களது துப்பாக்கி வேட்டொன்றில் விழுந்திருக்கலாமே!
இல்லை,
காணாமற் போனோருள் ஒருவனாய் புதைகுழியொன்றுள்
அமிழ்ந்திருக்கலாமே!
குண்டு விழுந்து சரிந்த கூரைக்குக் கீழ் அல்லது சுவரொன்றன் கீழ்
புதையுண்டு போயிருக்கலாமே!
போகவில்லை.
அகதிமுகாமொன்றில் பட்டினியோ பெரும்பிணியோ உன்னை மெல்ல
அரித்திருக்கலாமே!
இல்லை.
என்றாலும் போய்விட்டாய்.
இங்கே உனக்காக ஒருவன் இரைமீட்டுக் கொள்கிறான்.
நிலையாமை சாவென்று நிறையவே பேசுகிறான்.
சொல்லுவன யாவுமே சுடலை ஞானந்தான்.
எனினும்
உன் சாவைக் கொணர்ந்தவர்கள் அவனுக்கு இனியவரோ?
ஏனோ
கொலையை, கொலைஞர்களை ஏசவும் முடியாமல்
கொலைச்செயலை வீரமெனக் கொண்டாட இயலாமல்
திணறுகிறான், பாவம்.
சாவதற்கு எத்தனையோ வழியிருந்தும் நீ அறிந்தும்
ஏனிந்த விதமாய் உன் 'நண்பனது' வாயடைக்க
முதலைகளின் விழிகளிலும் வழிகின்ற நீர் வற்ற
வானவெளியினிலே சாவினை நீ தேடினாய்?

நன்றி:- தோற்றுத்தான் போவோமா
சி. சிவசேகரம்



22, வெளிவட்ட வீதி, வவுனியா சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களால் இரத்தனப்பிட்டிய C.R.C. Press (Pvt) Ltd.